# அகத்தியர் வாக்கியம் 50



தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்

**சரசுவதி மகால் நூலகம்**

தஞ்சாவூர்.

தஞ்சாவூர் சரசுவதி மகால் வெளியீட்டு எண். 422

# அகத்தியர் வாக்கியம் ஐம்பது

*சிறப்புக்கேண்மைப் பதிப்பாசிரியர்:*

**மருத்துவர் சே. பிரேமா**, எம்.டி.,

பேராசிரியர் மற்றும் தலைவர், சித்தமருத்துவத்துறை,

தமிழ்ப்பல்கலைக்கழகம், தஞ்சாவூர்-1.

தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்

**சரசுவதி மகால் நூலகம்,**

தஞ்சாவூர்.

2006 ] [ விலை : ரூ. 40 - 00

# நூற்பதிப்பு விளக்கக் குறிப்பு


| | |
|---|---|
| நூற்பெயர் | : அகத்தியர் வாக்கியம் ஐம்பது |
| பதிப்பாசிரியர் | : டாக்டர் சே. பிரேமா, எம்.டி., |
| வெளியிடுபவர் | : இயக்குநர்,<br>சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர். |
| வெளியீட்டு எண். | : 422 |
| மொழி | : தமிழ் |
| பதிப்பு | : இரண்டாம் பதிப்பு |
| வெளியீட்டு நாள் | : 2006 |
| தாள் | : TNPL 18.6 கி. கி |
| நூல் அளவு | : 24 x 14 செ. மீ. |
| பக்கங்கள் | : 76 |
| படிகள் | : 500 |
| எழுத்து | : 12 புள்ளி |
| அச்சிட்டோர் | : ஒளி அச்சு,<br>சரசுவதி மகால் நூலகம். |
| புத்தகக்கட்டு | : லேமினேசன் அட்டை |
| பொருள் | : மருத்துவம் |
| விலை | : ரூ. **40 - 00** |

# வெளியீட்டாளர் முகவுரை

தஞ்சையில் அமைந்து தரணிக்கெல்லாம் அறிவு வெளிச்சத்தை அளித்துவரும் அரிய கலை விளக்கமாகச் சரசுவதி மகால் நூலகம் திகழ்ந்துவருகின்றது. இந்நூலகம் பன்மொழிச் சுவடிகளையும், நூல்களையும் தன்னகத்தே கொண்டு இந்திய மொழிகளின் ஒருமைப்பாட்டு நிறுவனமாகவும் ஒளிர்ந்து வருகின்றது. இவ்வருமை பொருந்திய இந்நூலகம் தமிழ் இலக்கியச் சுவடிகளின் கருவூலமாக மட்டுமின்றித் தமிழ்ச் சித்த மருத்துவச் சுவடிகளின் களஞ்சியமாகவும் விளங்குகின்றது.

அகத்திய முனிவர் பொதிகை மலையில் பல்லாண்டுகள் வாழ்ந்தார் என்றும், பல்கலைகளை வளர்த்தார் என்றும் அவரிடம் மருத்துவம் பயின்ற சீடர்கள் பலர் என்றும் கூறப்படுகின்றது. கம்பர் "என்றும் உள தென்தமிழை இயம்பி இசை கொண்டான்" என்று அகத்தியரைப் போற்றுவார். பெரும்பாலான சித்த மருத்துவ நூல்கள் அகத்தியர் பெயராலேயே வெளியிடப்பட்டிருக்கின்றன. சீடர்கள் பலர் தாம் இயற்றிய நூல்களை அகத்தியர் இயற்றியதாகக் கூறி வெளியிட்டனர் என்றும் கூறப்படுவதுண்டு.

**அகத்தியர் வாக்கியம் ஐம்பது** அகத்தியரால் எழுதப்பட்டதா அல்லது அவர் சொல்லிய

வாக்கியத்தை அவர் சீடர்களில் ஒருவர் வெளியிட்டாரா என்பது புலனாகவில்லை. இது எவ்வாறாயினும் நூல் பெரும்பயன் கொடுக்கக் கூடியதே ஆகும். இந்நூலகத்தில் இடம்பெற்றுள்ள சித்த மருத்துவச் சுவடிகளைத் தக்க வல்லுநர்களைக் கொண்டு நூல்களாகப் பதிப்பித்து வெளியிடும் பணியையும் இந்நூலகம் தொடர்ந்து ஆற்றிவருகின்றது.

இந்நிறுவனத்தின் நூல் வெளியீட்டு வரிசையில் மற்றுமொரு குறிப்பிடத் தகுந்த சித்தமருத்துவ நூலாகத் தற்பொழுது அகத்தியர் வாக்கியம் ஐம்பது என்னும் இந்நூல் இரண்டாம் பதிப்பாக தற்பொழுது வெளியிடப்படுகின்றது.

இந்நூலில் ஐம்பது பாடல்கள் சூரண வகைகள், மாத்திரை வகைகள், இலேகிய வகைகள், நெய் வகைகள் முதலான மருந்து வகைகள் குறித்த செய்திகள் விளக்கப்பெற்றுள்ளன. சுவடியில் காணப்படும் அரிய மருந்துகளை, தமிழ்ப் பல்கலைக் கழகச் சித்தமருத்துவத்துறை தலைவர் மருத்துவர் சே. பிரேமா அவர்கள் மிகச்சிறப்பாக பதிப்பித்து அளித்துள்ளார்கள். அவர்களுக்கு என் பாராட்டுக்கள்.

இந்நூல் வெளியீட்டுக்குத் தேவையான நிதியுதவியை நல்கியுள்ள நடுவண் அரசுக்கு என் நன்றியை உரித்தாக்குகின்றேன்.

இந்நூல் நன்முறையில் வெளிவர ஆவனசெய்துள்ள சரசுவதி மகால் நூலக நிருவாக அலுவலர் மற்றும் வெளியீட்டு மேலாளர் (பொறுப்பு)

வகிக்கும் திரு. சாமி. சிவஞானம் அவர்களுக்கும், இந்நூலை நன்முறையில் அச்சிட்ட கணினி பிரிவினருக்கும், நூல் வெளிவரத் துணைநின்ற ஏனையோருக்கும் என் இனிய பாராட்டுக்கள்.

இந்நூல் குறிப்பாகச் சித்தமருத்துவத் துறையினரும், பொதுவாக அனைத்து மக்களும் வாங்கிப் பயன்பெறும் வகையில் அமைந்துள்ளது என நம்புகிறேன்.

**சா. விஜயராஜ் குமார்,** இ. ஆ. ப.,
மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும்
இயக்குநர்,
சரசுவதி மகால் நூலகம்.

தஞ்சாவூர்,
27 -7-2006.

# முகவுரை

அகத்தியர் வாக்கியம் என்ற பெயரில் சூரண வகைகள், மாத்திரை வகைகள், இலேகிய வகைகள், நெய் வகைகள் முதலான மருந்து வகைகள் ஒவ்வொன்றும் ஐம்பது பாடல்களாக எழுதப்பட்டுள்ளன. சுவடி எண். 208, 209, 223 ஆகியவற்றில் மாத்திரை வகைகளும், சுவடி எண். 192, 243(E) ஆகியவற்றில் இலேகிய வகைகளும், சுவடி எண். 243(D)இல் சூரண வகையும், சுவடி எண். 243 (F)இல் நெய் வகையும் உள்ளன. ஆயினும் சூரண வகையும், மாத்திரை வகையும் பற்றிய சுவடிகளே பதிப்புக்கு ஏற்ற நிலையில் இருந்தன. இலேகிய வகையும், நெய் வகையும் பற்றிய சுவடிகள் பிழையான பல பாடல்களைக் கொண்டிருந்தன. எனவே மாத்திரை வகை, சூரணவகை நூல்கள் மட்டுமே இங்கு பதிப்புச் செய்யப்படுகின்றன. இவற்றில் உள்ள பல பாடல்கள் இந்நூலகத்தால் வெளியிடப்பட்டுள்ள அகத்தியர்-2000 என்ற நூலின்கண் காணப்படுகின்றன. அப்பாடல்களும் இதுபோன்றே பிறசுவடிப் பாடல்களும் ஒப்புநோக்கப்பட்டுப் பாடவேறுபாடுகள் அவ்வப்பாடலின் அடியில் குறிக்கப்பட்டுள்ளன.

இச்சுவடிகளைத் தொகுத்துள்ள டாக்டர் வெங்கடராஜன் என்பவர் இதன் பாடல்கள் தேரையர் நூலில் உள்ளது போல் உள்ளன எனினும் அகத்தியர் வாக்கியம் எனச் சுவடியில் பெயரிடப்பட்டுள்ளதாகக் குறிப்பிடு கின்றார். சித்தமருத்துவத்திற்குச் சிறப்புச் சேர்க்கும் தாதுபாடாணங் களைக்கொண்டு செய்யப்பட்டுள்ள மாத்திரை வகைகள் இதில் காணப்படுகின்றன. எளிதில் செய்யக்கூடிய சூரணவகைகள் கூறப்பட்டுள்ளன. சுத்திமுறை பற்றிய குறிப்புகள் இணைப்பாகக் கொடுக்கப்பட்டுள்ளன.

பொருளடக்கம், பாடல் முதல் குறிப்பகராதி, மருந்துச் சரக்குகளின் அறிவியல் பெயர்களும் அகரவரிசைப் படுத்தித்தரப்பட்டுள்ளன. இந்நூல் சித்தமருத்துவ ஆய்வாளர்களுக்கும், மருந்து செய்வோருக்கும் துணைபுரியும் ஒரு கையேடு எனலாம்.

இந்நூல் உருவாக அனுமதி அளித்த தஞ்சை மாவட்ட முன்னாள் ஆட்சித்தலைவர் து.நா.இராமநாதன், இ.ஆ.ப., அவர்களுக்கும், இப்பதிப்புக்கு வெளியீட்டாளர் முகவுரை வழங்கி நூல் வெளிவர இசைவளித்த தஞ்சை மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் மூ. இராசாராம், இ.ஆ.ப., அவர்களுக்கும், தஞ்சை மகாராஜா சரபோஜி சரசுவதி மகால் நூலக நிருவாக அலுவலர் திரு சாமி. சிவஞானம் அவர்களுக்கும், பதிப்புத்துறை மேலாளர் திரு அ. பஞ்சநாதன் அவர்களுக்கும், சுவடிகள் பெயர்த்தெழுதி நூலாக்கத்திற்கு உறுதுணை புரிந்த மரு.ச.அரங்கராசன் (சித்தமருத்துவ அலுலவர், அரசினர் மருத்துவமனை, கந்தர்வகோட்டை) அவர்களுக்கும், பிரதியெடுக்கவும், குறிப்புகள் தயார் செய்யவும் உதவிய மரு. பெ. பாரதஜோதி (விரிவுரையாளர், சித்தமருத்துவத்துறை, தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழகம்) அவர்களுக்கும், பிழை நீக்கம் செய்து நெறிப்படுத்தி உதவிய பாவலரேறு பாலசுந்தரனார் அவர்களுக்கும், இந்நூலை அச்சிட்டுள்ள தஞ்சை ராஜன் பிரஸ் அச்சகத்தாருக்கும் என் நன்றிகள் உரியன.

**மருத்துவர் சே. பிரேமா**, எம்.டி.,
பேராசிரியர் மற்றும் தலைவர்,
**சித்தமருத்துவத்துறை,**
தமிழ்ப் பல்கலைக் கழகம்
தஞ்சாவூர் - 1.

## அகத்தியர் வாக்கியம் ஐம்பது

# பொருளடக்கம்


| வரிசை எண். | பொருள் | பக்க எண். |
|---|---|---|
| 1. | அக்கினிமுகச் சூரணம் | 2 |
| 2. | அசுவகந்திச்சூரணம் | 24 |
| 3. | அதிசாரத்திற்குச் சூரணம் (1) | 17 |
| 4. | அதிசாரத்திற்குச் சூரணம் (2) வேறு | 18 |
| 5. | இரத்த பித்தத்திற்குச் சூரணம் | 24 |
| 6. | இலவணாதிச் சூரணம் | 6 |
| 7. | உடல் பலத்திற்குச் சூரணம் | 21 |
| 8. | ஏலாதிச் சூரணம் | 1 |
| 9. | கணைக்குச் சூரணம் | 23 |
| 10. | கரப்பானுக்குச்சூரணம் | 27 |
| 11. | கற்பூராதிச் சூரணம் | 3 |
| 12. | காசம் பித்தத்திற்குச் சூரணம் | 17 |
| 13. | கிராணிக்குச் சூரணம் 1 | 18 |
| 14. | கிராணிக்குச் சூரணம் 2(வேறு) | 26 |
| 15. | குக்குலாதிச் சூரணம் | 7 |
| 16. | கோழிச்சூரணம் | 16 |
| 17. | சரீர புஷ்டிக்குச் சூரணம் | 22 |
| 18. | சருமநோய்க்குச் சூரணம் | 19 |
| 19. | சிங்காதிச்சூரணம் 1 | 8 |
| 20. | சிங்காதிச்சூரணம் 2 (வேறு) | 9 |
| 21. | சுவாசகாசத்திற்குச் சூரணம் 1 | 15 |
| 22. | சுவாசகாசத்திற்குச் சூரணம் 2 (வேறு) | 29 |
| 23. | சூலை புண்ணுக்குச் சூரணம் | 20 |

| | | |
|---|---|---|
| 24. | தாடி மாதுளைச் சூரணம் | 11 |
| 25. | தாளிசாதிச் சூரணம் 1 | 5 |
| 26. | தாளிசாதிச்சூரணம் 2 (வேறு) | 9 |
| 27. | திராட்சாதிச்சூரணம் 1 | 2 |
| 28. | திராட்சாதிச் சூரணம் 2 (வேறு) | 4 |
| 29. | பித்தத்திற்குச் சூரணம் 1 | 15 |
| 30. | பித்தத்திற்குச் சூரணம் 2 (வேறு) | 16 |
| 31. | பித்தத்திற்குச் சூரணம் 3 (வேறு) | 25 |
| 32. | பித்த வாயுவிற்குச் சூரணம் | 22 |
| 33. | பிரமேகத்திற்குச் சூரணம் | 27 |
| 34. | மந்தாக்கினி வாயுவிற்குச் சூரணம் | 20 |
| 35. | மலக்கட்டிற்குச் சூரணம் 1 | 13 |
| 36. | மலக்கட்டிற்குச் சூரணம் 2 (வேறு) | 14 |
| 37. | மூலத்திற்குச் சூரணம் 1 | 21 |
| 38. | மூலத்திற்குச்சூரணம் 2 (வேறு) | 26 |
| 39. | மேகத்திற்குச் சூரணம் 1 | 11 |
| 40. | மேகத்திற்குச் சூரணம் 2 (வேறு) | 14 |
| 41. | வாதத்திற்குச் சூரணம் | 25 |
| 42. | வாந்திக்குச் சூரணம் | 10 |
| 43. | வாந்தி, விக்கலுக்குச் சூரணம் | 13 |
| 44. | வாயுவிற்குச் சூரணம் 1 | 12 |
| 45. | வாயுவிற்குச் சூரணம் 2 (வேறு) | 28 |
| 46. | விக்கலுக்குச் சூரணம் | 10 |

# அகத்தியர் வாக்கியம்


| வரிசை எண். | பொருள் | பக்க எண். |
|---|---|---|
| 1. | அரிதாரச் செந்தூரம் | 57 |
| 2, | ஆனந்த வயிரவன் | 30 |
| 3. | ஆனந்த வயிரவன் 2 (வயிறு) | 35 |
| 4. | இராமபாண மாத்திரை | 32 |
| 5. | இலிங்கமாத்திரை | 31 |
| 6. | உலோகச்செந்தூரம் | 58 |
| 7. | ஏலாதி உருண்டை | 39 |
| 8, | கண்டாவிழ்தம் 1 | 49 |
| 9. | கண்டாவிழ்தம் 2 (வேறு) | 50 |
| 10. | கபாட மாத்திரை 1 | 42 |
| 11. | கபாட மாத்திரை (வேறு) | 47 |
| 12. | காசம், புண்ணுக்கு மருந்து | 60 |
| 13. | காளமேகம் | 48 |
| 14, | கிராணிக்கபாடம் | 47 |
| 15. | குக்மக்குடோரி | 51 |
| 16. | குக்மக்குடோரி 1 (வேறு) | 51 |
| 17. | குக்மக்குடோரி மாத்திரை 2 | 58 |
| 18. | குன்ம சூலை மேகத்திற்கு | 59 |
| 19. | குன்மம் தீர பற்பம் | 52 |
| 20. | கோடாசூழி மாத்திரை | 30 |
| 21. | சயச்செந்தூரம் | 52 |
| 22. | சர்வ சுராங்கிசம் | 33 |
| 23. | சலோதாரி மாத்திரை | 61 |
| 24. | சன்னி சுரத்திற்கு மாத்திரை (வேறு) | 36 |

| | | |
|---|---|---|
| 25. | சன்னிசுராங்கிசம் 1 | 43 |
| 26. | சன்னி சுராங்கிசம் 2 (வேறு) | 45 |
| 27. | சன்னிபாதவயிரவன் | 43 |
| 28. | சிரங்கு தீரத்தைலம் | 61 |
| 29. | சீத சுராங்கிசம் 1 | 32 |
| 30. | சீத சுரங்கிசம் 2 (வேறு) | 35 |
| 31. | சீத சுராங்கிசம் 3 (வேறு) | 38 |
| 32. | சுயமாக்கினி | 53 |
| 33. | சுரக்கபாடம் | 40 |
| 34. | சுரத்திற்கு மாத்திரை | 37 |
| 35. | சுராங்கிசம் 1 | 40 |
| 36. | சுராங்கிசம் 2 (வேறு) | 41 |
| 37. | சுராங்கிசம் 3 (வேறு) | 44 |
| 38. | சுராங்கிசம் 4 (வேறு) | 45 |
| 39. | சூலை கிரந்திக்கு | 60 |
| 40. | சூலை குன்ம மாத்திரை | 45 |
| 41. | தோட சாந்தவயிரவன் | 34 |
| 42. | பஞ்ச செந்தூரம் | 56 |
| 43. | பேதி மாத்திரை | 38 |
| 44. | பைரவ மாத்திரை | 36 |
| 45. | வங்கச்செந்தூரம் | 56 |
| 46. | வயிரவன் மாத்திரை | 34 |
| 47. | வாதத்திற்கு மாத்திரை | 41 |
| 48. | வெள்ளைப்பாடண மாத்திரை | 59 |

# வேண்டுகோள்

கருணையுள்ளங்கொண்ட நம் முன்னோர்கள் அரிய பெரிய இலக்கியங்களையும், பிறவற்றையும் பனை ஓலைகளில் எழுதிச் சுவடிகளாக நமக்குத் தந்தனர். அவை பல்வேறு இடங்களில் முடங்கி உள்ளன. சுவடிகள் பழுதடைவதற்குமுன் சரசுவதி மகாலுக்கு அன்பளிப்பாகக் கொடுத்துதவினால், அவை மக்களுக்குப் பயன்படும்.

மகாலுக்குக் கொடுப்பதன் மூலம், சுவடி தந்தவர்களும், சுவடி எழுதியோரும் அழியாப்புகழை, பெருமைசால் சரசுவதி மகால் உள்ளளவும் பெறுவர். அவை பதிப்பாகி வருமாயின் சுவடி தந்தார் பெயர் இடம்பெறுவதோடு, அப்பதிப்பில் ஐந்து பிரதிகளும் பெறுவர்.

எனவே, நாம் பெற்ற பேறு பெறுக இவ்வையகம் என்ற எண்ணமுடைய நற்பண்பாளர்கள் தம்மிடமுள்ள சுவடிகளைச் சரசுவதி மகாலுக்குத் தந்துதவ வேண்டுகிறேன்.

தஞ்சாவூர்

**மாவட்ட ஆட்சித்தலைவர்**
**மற்றும் இயக்குநர்**
சரசுவதி மகால் நூலகம்.

# அகத்தியர் வாக்கியம் சூரண வகை ஐம்பது

### ஏலாதிச் சூரணம்

ஏலமொடு தாமரை வளையம்நா கேசுரம் சந்தனம் கிராம்பு
இலவங்கப் பட்டையும் பத்திரி சடாமாஞ்சில் இயலான பேரீச்சமும்
கோலமுள்ளதிரிபலை கொத்தமல்லி தேவதாரம் குருவிலா லாம்பிச்சமும்
குளிதாளிசபத்திரி சாதிக்காய் கற்பூரம் குலவு செம்மா முந்திரி
தாலமுள பனையோடு நன்னாரி சதாவேரி சதகுப்பை தேசத்திப் பிலி
தரு அசுவகந்தி இரு சீரகம் உ ரோகணி தூய மஞ்சள் கூகை நீறு
ஞாலமுள அகில்முந் தகசுரமும் பல்லெருநல் தேக்குசிங்கி வேம்பு
நன்மை பெறு மரமஞ்சள் கருவேம்பு சீந்தில் சமன்நல்ல
ஏலாதிஇதுவே.(1)

***சேரும் சரக்குகள் :*** ஏலம், தாமரைவளையம், சிறுநாகப்பூ, சந்தனம், கிராம்பு, இலவங்கப்பட்டை, இலவங்கப்பத்திரி, சடாமாஞ்சில், பேரீச்சு, கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய், கொத்துமல்லி, தேவதாரம், விலாமிச்சை, தாளிசபத்திரி, சாதிக்காய், கற்பூரம், முந்திரிகை, நிலப்பனை, நன்னாரி, தண்ணீர்விட்டான்கிழங்கு, சதகுப்பை, திப்பிலி, அமுக்கிரா, சீரகம், கருஞ்சீரகம், கடுகு ரோகிணி, மஞ்சள், கூகைநீறு, அகில் தகரை, தேக்கு, கர்க்கடகசிங்கி, வேம்பு, மரமஞ்சள், கருவேம்பு, சீந்தில் சமஅளவு.

***செய்முறை:*** இவற்றை முறைப்படி சுத்திசெய்து பொடி செய்து, சலித்து எடுத்துக்கொள்ள வேண்டும். இதுவே ஏலாதிச்சூரணம் எனப்படும்.

***குறிப்பு:*** தீரும்நோய் பற்றிய விவரம் கூறப்பட வில்லை.

## அக்கினி முகச்சூரணம்

கொடுவேலி வேர்மிளகு கூர்சவர் லவணமும் கொள் பெருங்காயமொடு
கோஷ்டமிகு தாமரைத் தாதுடன் விலங்கமும் கூறு திப்பிலி மூலமும்
வடுவான சிறுதேக்கு ஓமமுடனே சுக்கு வளகிலுப் பையோடு சாரமும்
வளர்கின்ற திப்பிலி இரண்டுமே அல்லாது மாவசம் பொடு
கடுகினுடன் பொடியாதி தயிர் சுக்கு நீரிலது காய்கின்ற வெந்நீர் தனில்
கடியமது வெண்ணெயொடு அக்கினிமுகச் சூரணம் கழஞ்சு
ஒரு கொள்ளவே
விடு முதர வாயு மூலமொடு மந்தமும் மிக்கதோர் கிராணி தானும்
மிஞ்சிய சுவாசமும் மூர்த்தமுக வாயுவும் விண்ணடலி குடிபுகுமே. (2)

***சேரும் சரக்குகள்:*** கொடிவேலிவேர், மிளகு, உப்பு, பெருங்காயம், கோட்டம், தாமரைத்தாது, வாய்விளங்கம், திப்பிலி மூலம், சிறுதேக்கு, ஓமம், சுக்கு, இலுப்பை, சத்திச்சாரம், அரிசிதிப்பிலி, கண்டத்திப்பிலி, வசம்பு, கடுகு இவற்றை சமஅளவு எடுத்துக்கொள்ளவேண்டும்.

***செய்முறை:*** மேற்கண்ட சரக்குகளை முறைப்படி சுத்திசெய்து பொடி செய்து சலித்து வைத்துக்கொள்ள வேண்டும்.

***அனுபானம்:*** தயிர், சுக்குநீர், வெந்நீர், தேன், வெண்ணெய்.

***அளவு:*** ஒருகழஞ்சு.

***தீரும்நோய்கள்:*** வயிற்றில் உண்டான வாயு, மூலம், அக்கினிமந்தம், கிராணி, சுவாசம், முகவாயு தீரும்.

## திராட்சாதிச் சூரணம்

முந்திரிகை யின்பழம் பேரீஞ்சினல் பழம் முதலான அதிமதுரமும்
முதிர் விள நெற்பொரியும் நெய்தல் கிழங்குடன்
அந்தமிகு கொத்துமல்லியும் மற்றவகை ஏலமுடனே
அரிய கிராம்புடன் இருவேலி நன்னாரி இலவங்கம்

இனிதான திப்பிலி தகரமு மிசை கூகை நீறுமுடனே
சந்தனத் தக்கோல இலவங்கப் பத்திரி சாதியின் காய் சமனாதாய்
சக்கரையு மப்படி திராட்சாதி சூரணந் தான் தேனுடன் கொள்ளவே
அந்தர வியாதி சயரோகம் யோனி தோடம்
அதிதாகம் பித்தப்பாண்டு அரோசகம் தாபசுரம்
இரத்தப் பாடுடன் முதல னேக ரோகங்கள் போமே. (3)

***சேரும் சரக்குகள்:*** உலர்ந்த திராட்சை, பேரீச்சம்பழம், அதிமதுரம், விளா, நெற்பொரி, நெய்தல்கிழங்கு, கொத்துமல்லி, ஏலம், கிராம்பு, வெட்டிவேர், நன்னாரி வேர், இலவங்கப்பட்டை, திப்பிலி, தகரைவிதை, கூகைநீறு, சந்தனம், தக்கோலம், இலவங்கப்பத்திரி, சாதிக்காய் இவற்றை சம அளவு எடுத்துக்கொண்டு இதற்கு நேரளவு சர்க்கரை எடுத்துக்கொள்ளவும்.

***செய்முறை:*** சர்க்கரை தவிர ஏனைய சரக்குகளைச் சுத்தம்செய்து, பொடித்து அதனுடன் சர்க்கரை சேர்த்து வைத்துக்கொள்ளவேண்டும்.

***அனுபானம்:*** தேன்.

***தீரும் நோய்கள்:*** அந்தரரோகம், சயம், யோனிதோடம், தாகம், பித்தப்பாண்டு, சுவையின்மை, தாபசுரம், இரத்தப் போக்கு இவை தீரும்.

**கற்பூராதிச் சூரணம்**

கற்பூர மொடு நெல்லி வெட்டிவேர் சீரகம் கன செவ்வியம் கோட்டமுடன்
கற்கடகசிங்கிமுத லதிமதுரமுத்தமும் கருதரிய இலவங்கமும்
தற்கோல இலவங்கப் பத்திரி அமுக்கிரா சந்தனம் நிலப்பனையும்
போதக் கலந்தோர் கழஞ்சு சர்க்கரை கொள்ளப் பொங்கும்
கற்பூர வாதி சிறப்பு தலத்தில் கருந்தேனுடன் கொள்ளீர் தீராத
இரத்த பித்தம் தீரும் சுயம்பித்தம் பாண்டுவும் தாகமும் சென்றே
ஒழிந்துவிடுமே. (4)

***சேரும் சரக்குகள்:*** கற்பூரம், நெல்லி, வெட்டிவேர், சீரகம், செவ்வியம், கோட்டம், கற்கடகசிங்கி, அதிமதுரம், முத்தக்காசு, கிராம்பு, தக்கோலம், இலவங்கப்பத்திரி, அமுக்கிரா, சந்தனம், நிலப்பனை, தாமரைவளையம், சுக்கு, மிளகு, திப்பிலி, நன்னாரி, விலாமிச்சை, திராட்சை, கூகைநீறு, சாதிக்காய், சீந்தில் சர்க்கரை இவற்றை சம அளவு எடுத்துக்கொண்டு இதற்கு நேரளவு சர்க்கரை எடுத்துக் கொள்ளவேண்டும்.

***செய்முறை:*** மேற்கண்ட சரக்குகளை சுத்திசெய்து பொடித்துச்சர்க்கரை கலந்து வைத்துக்கொள்ள வேண்டும்.

***அனுபானம்:*** தேன்.

***தீரும்நோய்கள்:*** இரத்த பித்தம், கயம், பித்தப்பாண்டு, தாகம்.

### திராட்சாதிச் சூரணம் (வேறு)

கூறிய விலமிச்சை ஏலமொடு ரேணுகம் குங்குமம் கற்பூரமும்
குளிர் மதுரம் சீரகம் சந்தனம் கோஷ்டமும் கூறும் பொரி செஞ்சந்தனந்
தூறு திரிகடு தாகமும் அகவமொடு முந்திரிகை துயர் மிட்டான
நெருஞ்சில் பின்னும் சொல் சாதிபத்திரி அதன் காய் அரைத்தாது தாது
முளி தக்கோலமும்
ஊறிய மரைக்கிழங்கு உற்ற பூனைக்காலி உயர் செண்பகப் பூவுடன்
எழில் பனை களிவை ஒருபங்கு முத்தமிவை யொட்டிக்கி ரட்டியு
மாகவே
வீறிய திராட்சாதி சூரணந்தன்னிலே விளைந் தேன் சர்க்கரை (கொள்ளவே)
மீறு கய ரோகமது பித்தா மிகுரோகமும் (வெக்கையும் தீருமே) (5)

***சேரும் சரக்குகள்:*** விலாமிச்சை, ஏலரிசி, வால்மிளகு, குங்குமப்பூ, கற்பூரம், அதிமதுரம், சீரகம், சந்தனம், கோட்டம், நெற்பொரி, செஞ்சந்தனம், சுக்கு, மிளகு, திப்பிலி, சிறுநாகப்பூ, அமுக்கிரா, திராட்சை, நெருஞ்சில், சாதிபத்திரி, சாதிக்காய், தாமரைவளையம், தக்கோலம்,

தாமரைக்கிழங்கு, பூனைக்காலி இவை அனைத்தும் ஒரு பங்கு எடுத்துக்கொண்டு, பனம்பூ, செண்பகப்பூ இவை இரண்டும் ஒருபங்கு, முத்தக்காசு 2 பங்கு எடுத்துக்கொள்ளவேண்டும்.

***செய்முறை:*** மேலே கூறிய சரக்குகளை முறைப்படி சுத்தம் செய்து இடித்துச் சலித்துக்கொள்ள வேண்டும். கற்பூரத்தை மட்டும் கடைசியில் சேர்த்து இடித்துக்கொள்ள வேண்டும்.

***அனுபானம்:*** தேன், சர்க்கரை.

***தீரும் நோய்கள்:*** கபம், பித்தம், உடல் அனல்.

## தாளிசாதிச் சூரணம்

**தாளிச முத்தம் நாகப்பூ அக்கிரா சாதிச் சீரகம் வசம்பு தக்கோல**
**மதுர மரஞ்சள் கையாந் தகரை தாமரைத்தாது மஞ்சள்**
**வேலி தேக்குத் திரிகடுகு செவ்விய வட்சாரம் வெள்ளிலோத் திரமோதம்**
**விளங்கு ஆடாதோடை மாஞ்சில் ரோகணி இலாமிச்சம் வேர்தூது**
**ஞாலத் தரத்தை வட்டத் திருப்பி இலுப்பை சத்திச சாரமும் சங்கு**
**கீழா நெல்லி சீர்கோட்டம் திரிபலை இருவேலி பூரமீட்டான்**
**கோல முளதேவதாரம் கண்டில் வேர் தேள் கொடுக்கு கரந்தை இளங்காய்**
**கூறுகொன் றைக்கனி காம்புடன் பிரமி கொத்தமல்லி பொடி சமனதாய்**
**கால மேதாளிச சூரணங் கழஞ்சு சர்க்கரை மதுவில் நெய்யில் கொள்ளில்**
**காசஞ் சுவாசமும் மருந்தீடு அரோசிகம் கபமிருமல் மந்தமில்லையே.(6)**

***சேரும் சரக்குகள்:*** தாளிசபத்திரி, முத்தக்காசு, சிறுநாகப்பூ, அக்கிரகாரம், சாதிக்காய், சீரகம், வசம்பு, தக்கோலம், அதிமதுரம், மரமஞ்சள், கையாந்தகரை, தாமரைத்தாது, மஞ்சள், கொடிவேலி, சிறுதேக்கு, சுக்கு, மிளகு, திப்பிலி, செவ்வியம், எவச்சாரம், வெள்ளிலோத்திரம், ஓமம், ஆடாதோடை, சடாமாஞ்சில், கடுகுரோகிணி, விலாமிச்சம்வேர், தூதுவளை, ஏலம், சிற்றரத்தை, வட்டத்திருப்பி, இலுப்பை, சத்திச்சாரம், சங்கு, கீழாநெல்லி, கோட்டம், கடுக்காய், நெல்லிக்காய்,

தான்றிக்காய், வெட்டிவேர், கற்பூரம், தேவதாரம், தொட்டாற்சுருங்கிவேர், தேள்கொடுக்கு, கரந்தைக்காய், கொன்றைப்பழம்,கொன்றைக்காம்பு, பிரமி, கொத்துமல்லி இவற்றைச் சமஅளவு எடுத்துக்கொள்ளவேண்டும்.

***செய்முறை:*** மேற்படி சரக்குகளை முறைப்படி சுத்தி செய்து சூரணித்து வைத்துக்கொள்ளவும்.

***அனுபானம்:*** சர்க்கரை, தேன், நெய்.

***தீரும்நோய்கள்:*** காசம், சுவாசம், மருந்தீடு, பசியின்மை, கபம், இருமல், மந்தம்.

## இலவணாதிச் சூரணம்

பஞ்சலவணத்தொடு பஞ்சகோ லங்களிவை பலம் பத்தாய்
பகர் பெருங் காயமது மூன்றுபலம் வெண்காரம் பண்ணு சத்திய
வட்சாரமும்
விஞ்சிய வட்சாரமிள கசமாதமும் மிதிபாகல் சாறுதன்னில்
மிகவே வறுத்தும் பின் துத்தம் சவுக்காரமே நாற்கா செடை யுடன்
தஞ்சிறுக் கிரைமருள் கள்ளிஎள் ளுப்பரசு தந்தநாயுருவி கதலிச் சருகொடு
பிரண்டை புளியஞ்சிதன் தனித்தனிச் சாம்பல் வகை பலமிரண்டும்
துஞ்சவே தூளா யிடித்துடன் தூள் செய்து சுக்குநீர் தன்னில்
உண்ணச்சு வாசகாச வாய்வு வாதசுர மூலமும்தூர விட்டோடிவிடுமே. (7)

***சேரும் சரக்குகள்:*** சோற்றுப்பு, கல்லுப்பு, வளையலுப்பு, வெடியுப்பு, இந்துப்பு, சித்திரமூலம், சுக்கு, செவ்வியம், திப்பிலிமூலம், திப்பிலி இவை வகைக்கு 10பலம், பெருங்காயம் 3 பலம்.

வெங்காயம், வெங்காரம், சத்திச்சாரம், எவச்சாரம், மிளகு, அசமதாஓமம் வகைக்கு 1 பலம் எடுத்து இவற்றை மிதிபாகல் சாற்றில் வறுத்துக்கொள்ள வேண்டும்.

துத்தம், சவுக்காரம் வகைக்கு 4 காசெடை எடுத்துக் கொள்ளவும். பின் சிறுகீரைச் சாம்பல், மருள் சாம்பல், கள்ளிச் சாம்பல், எள்ளுச் சாம்பல், புரகச் சாம்பல், நாயுருவிச் சாம்பல், வாழைச்சருகுச் சாம்பல், பிரண்டைச்சாம்பல், புளியம்பட்டைச் சாம்பல் இவை வகைக்கு 2 பலம் எடுத்துக்கொள்ளவும்.

***செய்முறை:*** இவற்றை முறைப்படி இடித்துச் சலித்துச் சூரணித்துக்கொள்ள வேண்டும்.

***அனுபானம்:*** சுக்குநீர்.

***தீரும்நோய்கள்:*** சுவாசகாசம், வாய்வு, வாதசுரம், மூலம்.

### குக்கிலாதிச் சூரணம்

குக்கில்பத் துப்பலம் சித்திர மூலம் மருள் கோரைக் கிழங்கு சங்கு கொன்றை
சாறெடை
நொச்சி புங்கொடு பிரண்டையும் கூர்பெரு மருந்து மெருகு
மிக்கசதுரக்கள்ளி நிலவேம்பு காவளை வெள்ளைச் சாரடை
சிவதை வேர்விறு கையாந் தகரை விளங்கத்திப் பிலிமூல மிகுசிங்கி
செவ்வியமுடன்
தக்க தேச திப்பிலி வசம்பு திரி பலை உள்ளி தருகொத்த மல்லி ஓமம்
தன்னுடன் சீரகம் இரண்டுவகை திரிகடுகு தான்தேக்கு மஞ்சள்
விடையம்
ஒக்குமர மஞ்சள் ஆயில்பட்டை வெண்காரமொடு இந்த வடசாரமோ
குற்ற குரோசானி கிராம்பு ஏலம் கோட்டமுயர் வாளமிவை யாகுமே

ஆகவே வளையலுப்பு கல்லுப்பு மதிகசத்தி யவட்சார முந்திரிகை
நாகம்பே ரிஞ் சரத்தை காயம் காந்தம் நல்ல காட்டாத்திப் பூவுடன் கடுகுரோகிணி
பாகுபெறு பெருமரம் கந்தகம் வெள்ளி பற்பமுடன் அப்பிரகம் எல்லாம் கூட்டி
வாகுடனே தேனில் உண்ண சர்வரோகம் வாங்கு மென்று முனிவர்கள்
வகுத்திட்டாரே.(8)

***சேரும் சரக்குகள்:*** குக்கில் 10 பலம், சித்திரமூலம், மருள், சங்கு, கோரைக்கிழங்கு, கொன்றை, சாரணை, நொச்சி, புங்கு, பிரண்டை, பெருமருந்து, மெருகு, சதுரக்கள்ளி, நிலவேம்பு, முட்காய்வேளை, வெள்ளைச்சாரணை, சிவதைவேர், கையாந்தகரை, வாய்விளங்கம், திப்பிலிமூலம், கற்கடகசிங்கி, செவ்வியம், திப்பிலி, வசம்பு, கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய், பூண்டு, கொத்துமல்லி, ஓமம், சீரகம், கருஞ்சீரகம், சுக்கு, மிளகு, திப்பிலி, தேக்கு, மஞ்சள், அதிவிடயம், மரமஞ்சள், ஆயில்பட்டை, வெங்காரம், எவச்சாரம், குரோசானி, ஓமம், கிராம்பு, ஏலம், கோட்டம், நேர்வாளம், வளையலுப்பு, கல்லுப்பு, சத்திச்சாரம், முந்திரிகை, சிறுநாகப்பூ, பேரீந்து, அரத்தை, பெருங்காயம், காந்தச்செந்தூரம், காட்டாத்திப்பூ, கடுகுரோகிணி, பெருமரப்பட்டை, கந்தகபற்பம், வெள்ளி பற்பம், அப்பிர பற்பம் இவற்றைச் சம அளவு எடுத்துக்கொள்ள வேண்டும்.

***செய்முறை:*** மேற்படி சரக்குகளை முறைப்படி சுத்திசெய்து இடித்துச் சலித்துச் சூரணம் செய்துகொள்ள வேண்டும்.

***அனுபானம்:*** தேன்.

***தீரும்நோய்:*** சர்வசுரம்.

### சிங்காதிச் சூரணம்

கற்கடகசிங்கி திரிபலையுங் கண்டங் கத்தரி வேர் விரையும்
சுக்கு, மிளகு திப்பிலியும் தூய கோட்டம் இந்துப்பு
மிக்குந் தேக்கு சடாமாஞ்சில் வேரே யோரொன் றோகழஞ்சு
ஒக்கு மெனவே சிங்காதி உரையாய் மாதே உலகினர்க்கே.

***சேரும் சரக்குகள்:*** கற்கடகசிங்கி, தான்றிக்காய், நெல்லிக்காய், கடுக்காய், சடாமாஞ்சில், சுக்கு, மிளகு, திப்பிலி, கோட்டம், இந்துப்பு, தேக்கு, கண்டங்கத்திரி வேர், கண்டங்கத்திரி விதை இவற்றைச்சமஅளவு எடுத்துக்கொள்ள வேண்டும்.

***செய்முறை:*** மேற்கண்ட சரக்குகளைச் சமஅளவு எடுத்துப் பொடித்துப் பொடிசெய்து சலித்து வைத்துக் கொள்ளவேண்டும்.

***தீரும் நோய்கள்:*** பாட்டில் கூறப்படவில்லை எனினும் எலிக்கடி, கிரந்திக்குப் பயன்படும்.

***பாடவேறுபாடு:*** தன்வந்திரி வாகடம் பாடல் எண்-785 இதுபோன்ற பாடல் அகத்தியர்-2000, பாகம்-3, பக்கம் 98ல் காணப்படுகின்றது. (தவகூஷீரி சூரணம்)

### தாளிசாதிச் சூரணம் - 2 (வேறு)

கூறுகின்ற தாளிச பத்திரமுஞ் கொள்மிளகும்
தேறுகின்ற நாகசுரமும் திப்பிலியும் - பேறுடனே
ஏலமக்கிரா காரஇல வங்கம்கூ கைநீறு
நலமுடனே வாந்திநிற்கு மாம். (10)

***சேரும் சரக்குகள்:*** தாளிசபத்திரி, மிளகு, சுக்கு, திப்பிலி, ஏலம், அக்கிரகாரம், கிராம்பு, கூகைநீறு இவற்றைச் சமஅளவு எடுத்துக்கொள்ள வேண்டும்.

***செய்முறை:*** மேற்கண்ட சரக்குகளை இடித்துச் சூரணம் செய்துகொள்ளவேண்டும்.

***தீரும்நோய்:*** வாந்தி.

### சிங்காதிச் சூரணம்

சிங்கி யுடனே தான்றிக்காய் சேர்ந்த நெல்லி சடாமாஞ்சி
துங்க மிருந்த திரிகடுகு துலங்கு கோஷ்ட மிந்துப்பு
பொங்கு கண்ட காலியிவை போதக் கூட்டித் தேனிஞ்சி
அங்கங் கொள்ள எலிக்கடியும் மாறு மிளைக் கிரந்தியதே. (11)

***சேரும் சரக்குகள்:*** கற்கடகசிங்கி, தான்றிக்காய், நெல்லிக்காய், சடாமாஞ்சில், சுக்கு, மிளகு, திப்பிலி, கோட்டம், இந்துப்பு, கண்டங்கத்திரி இவற்றைச் சமஅளவு எடுத்துக்கொள்ள வேண்டும்.

***செய்முறை:*** மேற்கண்ட சரக்குகளைச் சுத்திசெய்து பொடித்துச் சலித்து வைத்துக்கொள்ள வேண்டும்.

***அனுபானம்:*** தேன், இஞ்சி.

***தீரும்நோய்:*** எலிக்கடி, ஈளை, கிரந்தி.

**விக்கலுக்குச் சூரணம்**

அட்டித் திப்பிலி அஞ்சன நெற்பொரி
கட்டித் தேனில் கலந்துண வல்லீராய்
விட்ட விக்கலி டாது தவிர்ந்திடும்
கட்ட பொன்னிறம் கடரென மாறுமே. (12)

***சேரும் சரக்குகள்:*** அதிமதுரம், திப்பிலி, அஞ்சனக்கல், நெற்பொரி சம அளவு.

***செய்முறை:*** மேற்கூறிய சரக்குகளை சுத்திசெய்து இடித்துச் சூரணம் செய்து வைத்துக்கொள்ளவேண்டும்.

***அனுபானம்:*** தேன்.

***தீரும்நோய்:*** விக்கல்.

**வாந்திக்குச் சூரணம்**

நீடு மாதுளை நெற்பொரி சர்க்கரை
தேடுந் திப்பிலி தேனில் குழைத்துண்ண
பீடு செய்யும் பெருஞ்சத்தி தானிவை
ஓட ஓடத் துரத்துவ துண்மையே. (13)

***சேரும் சரக்குகள்:*** மாதுளை ஓடு, நெற்பொரி, சர்க்கரை, திப்பிலி இவற்றைச் சமஅளவு எடுத்துக்கொள்ள வேண்டும்.

***செய்முறை:*** சர்க்கரை நீங்கலாக மற்ற சரக்குகளைச் சுத்திசெய்து இடித்துச் சலித்து எடுத்துக்கொண்டு அத்துடன் சர்க்கரை சேர்த்துக் கலந்து வைத்துக்கொள்ள வேண்டும்.

***அனுபானம்:*** தேன்.

***தீரும் நோய்:*** வாந்தி.

***பாடவேறுபாடு:*** *பாடல் எண். 38, தேரையர் வைத்தியம்1001, பீடையான பெருவிக்கல் சத்தியம்.*

**மேகத்திற்குச் சூரணம்**

அகிலதி மதுரம் கொத்த மல்லிஆ வாரை மூலம்
புகல்மர மஞ்சள் தேத்தா வித்துடன் புகழ்கற் பூர
திகழ் சிலா சத்துஞ் சீந்தில் சர்க்கரை ரெண்டு பங்கும்
தகைமையாய்க் கூட்டிக் கொள்ள சகலமே கங்கள் போமே.(14)

***சேரும் சரக்குகள்:*** அகில், அதிமதுரம், கொத்தமல்லி, ஆவாரைச்சமூலம், மரமஞ்சள், தேற்றான்விதை, கற்பூரம், சிலாசத்து இவை ஒருபங்கு, சீந்தில் சர்க்கரை 2 பங்கு எடுத்துக்கொள்ளவும்.

***செய்முறை:*** சிலாசத்தை பற்பமாகச் செய்துகொண்டு அதனை மற்ற சரக்குகளை இடித்துச் செய்த சூரணத்துடன் கலந்துகொள்ள வேண்டும்.

***தீரும்நோய்கள்:*** அனைத்து வகை மேகநோய்கள்.

**தாடிமாதுளைச் சூரணம்**

தாடி மாதளைச் சூரண மாதளை தரித்த வில்வமுந் தாவு விளாவுடன்
தேடு மாதளை விரைஇல வம்பிசின் சேரும் மாத்திச் சிறந்திடும் பூவுடன்
தாட வேபுளி மாதுளைத் தோலுமாய் நன் பெருமட்டை வெள் வேலதின்
கூட வேயுறு தோல்பொன் முசுட்டையுங் கொள் நெருஞ்சி குறுகின் காயமே
குறுகுநாய்க் கடுகு கொள்ளுவெட் பாலையும் குளுமை சேரும் விடையமும்
கொண்டு தான்
மறுகு வெள்ளிலோத்தி திரமரப் பட்டையும் வருகி ராம்பு குரோசானி ஓமமும்
மிந்து கடுகுசீ ரகமிவை இசைந்த முள்ளி கழல் விரை தன்னுடன்
சிறுகு சாதியின் காயொளி முத்தமுஞ் சேர மேதித் தயிரினி லியவே. (15)

***சேரும் சரக்குகள்:*** மாதுளை ஓடு, வில்வப்பட்டை, விளாம்பட்டை, மாதுளைவிதை, இலவம்பிசின், ஆத்திப்பூ, புளிப்பு, மாதுளந்தோல், வெள்வேலம்பட்டை, பொன்முசுட்டை, நெருஞ்சில், பெருங்காயம், நாய்க்கடுகு, வெட்பாலை, அதிவிடயம், வெள்ளிலோத்திரப்பட்டை, கிராம்பு, குரோசானி ஓமம், இந்துப்பு, கடுகு, சீரகம், நீர்முள்ளி, கழற்சிவிரை, சாதிக்காய், முத்தக்காசு இவற்றை சம அளவு எடுத்துக்கொள்ள வேண்டும்.

***செய்முறை:*** மேற்கண்ட சரக்குகளை முறைப்படி சுத்தம் செய்து இடித்துச் சலித்துச் சூரணமாகச் செய்துகொள்ள வேண்டும்.

***அனுபானம்:*** எருமைத்தயிர்.

***தீரும்நோய்கள்:*** பாடலில் கூறப்படவில்லை ஆயினும் வாந்தி, விக்கல் தீரும்.

**வாயுவிற்குச் சூரணம்**

**சீரிய இருவருஞ் சிறந்த மூவரும்**
**கூரிய வொரு வரும் கொடியா காயமும்**
**ஆரிய ராகுமோர் அசம தாகமும்**
**நேருடன் கொள்ளவே நிற்கும் வாயுவே. (19)**

***சேரும் சரக்குகள்:*** சீரகம், கருஞ்சீரகம், சுக்கு, மிளகு, திப்பிலி, இந்துப்பு, பெருங்காயம் இவற்றைச் சம அளவு எடுத்துக்கொள்ள வேண்டும்.

***தீரும்நோய்:*** வாயு.

***பாடவேறுபாடு:*** பக்கம் 39 **வைத்தியக் களஞ்சியம்,** *1)மூவரும், 2) ஆரிய வடமலை, 3) நேர்பட அரைத்திட.* பக்கம்159, **தேரையர் வாகடம்,** *1)யாரிய வடக்கரை யமர்ந்த மோதகம், 2) நேர்படி னென்பொடி நெருப்பொக்குமே.* பக்கம்231, **தேரையர் வாகடம்,** *1) ஆரிய வடகலை அசம்தா கமுமிது 2) நேருடன் கூட்டியே நித்தலுங் கொள்விரேல்* பேரெழ வாயும் ஓடுதிச் சயந்தானே.

### மலக்கட்டிற்குச் சூரணம்

ஏல மிலவங்கம் நெல்லி முள்ளி இசைந்த கோட்டம் வாய்விடங்கம்
சூல முந்தி ரிகடு முரிகக் கடுக்காய் சமனாகச்
சாலச் சிவதை பாதி கொண்டு சமனாய் சர்க்கரை தான் கூட்டி
காலம் பெறவே கொண்டக்கால் கழியுங் காலை வயறிதுவே. (20)

***சேரும் சரக்குகள்:*** *ஏலரிசி, கிராம்பு, நெல்லிமுள்ளி, கோட்டம், வாய்விடங்கம், சுக்கு, மிளகு, திப்பிலி, கடுக்காய், சமஅளவு, சிவதை பாதியளவு, சர்க்கரை சமஅளவு.*

***செய்முறை:*** மேற்படி சரக்குகளைச் சுத்திசெய்து இடித்துச் சலித்துக்கொண்டு அத்துடன் சர்க்கரை கலந்து வைத்துக்கொள்ளவும்.

***தீரும்நோய்:*** காலையில் உண்ண வயிறு கழியும்.

### வாந்தி விக்கலுக்குச் சூரணம்

இப்பொரி மதுர மேல மிசைந்தநசீ ரகுமு மூன்றுடன்
திப்பிலி பலமுங் கூட்டி சேரவே பொரித்துத் தூவி
கைப்பு கொம் மட்டிச் சாறோடு மொக்கவே பிசைந்து கொள்ள
செப்பிய சத்தி விக்கல் ததிகாமேயத் தாபம் போம். (21)

***சேரும் சரக்குகள்:*** நெற்பொரி, அதிமதுரம், ஏலரிசி, சீரகம், கருஞ்சீரகம், பெருஞ்சீரகம், திப்பிலி இவை வகைக்கு 1 பலம் எடுத்துக்கொள்ளவும்.

***செய்முறை:*** மேற்படி சரக்குகளைப் பொரித்துப் பொடிசெய்து அத்துடன் சரியளவு கொம்மட்டிச்சாறு விட்டுப் பிசைந்து உண்ண வேண்டும்.

***தீரும் நோய்:*** வாந்தி, விக்கல்.

### மலக்கட்டுச் சூரணம் - 2 (வேறு)

துன்னாகத் துன்னாத் துளையாகும் தூர்ந்த சூதம்
பின்னாகும் பெந்தனையம் வாராது - தின்னாமே
சாரடைவேர் பாலில் சமனாக வெந்துலர்ந்த
நீறுடனே சர்க்கரை தேன் நெய். (22)

***செய்முறை:*** சாரணைவேரைப் பாலில் வேகவைத்து உலர்த்தி இடித்துத் தூள்செய்து சலித்து வைத்துக்கொள்ளவும்.

***அனுபானம் :*** தேன், நெய்.

***தீரும்நோய் :*** மலக்கட்டு.

### மேகத்திற்குச் சூரணம் - 2 (வேறு)

காட்டிற் கருணை கறிக்கருணை கடிய வெருகு கொடிவேலி
நாட்டில் சுக்கு நற்பிரண்டை நல்ல வாழை மருள் கிழங்கு
ஆட்டுத் தயிராய் வேக வைத்து அதனைத் தேனி லுண்டீராய்
கூட்டி லிருந்த மேகங்கள் குடிபோ மென்று கூறினாரே. (23)

***சேரும் சரக்குகள்:*** காட்டுக்கருணைக்கிழங்கு, கறிக்கருணைக்கிழங்கு, வெருகு, கொடிவேலி, சுக்கு, பிரண்டை, வாழைக்கிழங்கு, மருள்கிழங்கு இவற்றைச் சமஅளவு எடுத்துக்கொள்ள வேண்டும்.

***செய்முறை:*** மேற்படி சரக்குகளை முறைப்படி சுத்தம் செய்து உலர்த்திப் பொடிசெய்து கொள்ளவேண்டும். இச்சூரணத்தைத் தயிரில் வேகவைத்து எடுத்துக்கொள்ள வேண்டும்.

***அனுபானம் :*** தேன்.

***தீரும்நோய் :*** மேகங்கள்.

### பித்தத்திற்குச் சூரணம்

காட்டிற் கருணை பதினாறு கடிய வேலி யதன் பாகம்
நாட்டிற் சுக்கி வையதன்பாகம் நல்ல மிளகு தன்பாகம்
கூட்டி யிடித்துத் தேனதனிற் குழைத்து விழுங்க வல்லீராய்
ஓட்டிக் கொண்டு போம்பித்த மோடிப் போமென் றுரையீரே. (24)

***சேரும் சரக்குகள் :*** காட்டுக்கருணைக்கிழங்கு 16 பங்கு, கொடிவேலி 8 பங்கு, சுக்கு 4 பங்கு, மிளகு 2 பங்கு.

***செய்முறை :*** மேற்படி சரக்குகளை சுத்திசெய்து பொடித்துச் சலித்து வைத்துக்கொள்ள வேண்டும்.

***அனுபானம் :*** தேன்.

***தீரும்நோய் :*** அதிகரித்த பித்தம்.

### சுவாச காசத்திற்குச் சூரணம்

வெருண்டமிள கொன்று விரையழிஞ்சி லெட்டுத்
தெருண்ட பொடி கழஞ்சு தேனி - லருந்தவே
பட்டேன்பட் டேனென்னும் பஞ்ச சுவாச காசம்
கெட்டேன்கெட் டேனென்னப்போம் கேள். (25)

***சேரும் சரக்குகள் :*** மிளகு 1 பங்கு, அழிஞ்சில் 8 பங்கு.

***செய்முறை :*** மேற்படி சரக்குகளை சுத்திசெய்து இடித்துப் பொடிசெய்து சலித்து வைத்துக்கொள்ள வேண்டும்.

***அளவு :*** ஒரு கழஞ்சு.

***அனுபானம் :*** தேன்.

***தீரும் நோய் :*** சுவாசகாசம்.

### பித்தத்திற்குச் சூரணம் - 2 (வேறு)

திரிகடுகு சிவதை வேர் செய்த சூரணம்
குறிபடு சர்க்கரை கொள்ளுந் தேனுடன்
மறிபடு பித்தமும் வாயுவும் நயனநோய்
தறிகெட வோடுந் திண்ணந் திண்ணமே. (26)

***சேரும் சரக்குகள்:*** சுக்கு, மிளகு, திப்பிலி, சிவதைவேர் இவற்றைச் சமஅளவு எடுத்துக்கொண்டு, சர்க்கரை நேரளவு எடுத்துக்கொள்ளவும்.

***செய்முறை :*** சர்க்கரை தவிர மற்ற கடைச்சரக்குகளை சுத்திசெய்து சூரணித்து அத்துடன் சர்க்கரை கலந்து வைத்துக்கொள்ள வேண்டும்.

***அனுபானம் :*** தேன்.

***தீரும் நோய் :*** பித்தம், வாயு, கண்நோய்.

### கோழிச் சூரணம்

முத்தக் கோழி தனிச் சாவல் முதுகைப் பிளந்து கடுகிட்டு
உற்ற காயம் எண் கழஞ்சு உழக்கு மிளகு வெள்ளுள்ளி
பற்ற வரைத்துக் கோனீரில் பருகும் கள்ளிப் பால் வார்த்து
சற்றிக் கட்டிக் கோனீரில் சுருள வெந்து கொள் வீரரே
மெத்த வடித்த சூலை குன்மம் வெப்புப் பாவை அகன்றிடுமே. (27)

***சேரும் சரக்குகள் :*** முற்றிய கோழி அல்லது சேவல் 1, கடுகு, வெங்காயம் வகைக்கு 8 கழஞ்சு, மிளகு, வெள்ளுள்ளி வகைக்கு 1 உழக்கு.

***செய்முறை :*** கோழியில் இறகுகளை நீக்கி முதுகைக் கீறி கடுகு, வெங்காயம், மிளகு, வெள்ளுள்ளி இவற்றை பசுவின் நீரில் அரைத்து அதனுள் வைத்து அத்துடன் கள்ளிப்பால் விட்டு, கீறிய வாயைத் தைத்துக் கட்டி, பசுவின் நீரில் போட்டுச் சுருள வெந்த பிறகு எடுத்துக்கொள்ள வேண்டும்.

***தீரும் நோய் :*** சூலை, குன்மம், வெப்புப்பாவை.

*பாடவேறுபாடு:*

*அனுபவ வைத்தியமுறைகள் பக்கம்2, பாடல் எண். 4,*
*"முத்தக்கோழிதனைப் பிடித்து முதுகைப் பிளந்து கடுகுப்பு, ஒத்த காயம் யெண் கழஞ்சு உழக்கு மிளகு வெள்ளுள்ளி."*
*இந்த அடி மிகையாக உள்ளது.*
*"பத்தி இடித்து அதுக்குள்ளிட்டு பகரும் பானையில் மேல் வைத்து*
*கத்திக் கட்டிப் பானையிற்குள் சொல்லும் மருந்து நீர் கேளீர்"*

**காசம், பித்தத்திற்குச் சூரணம்**

ஏலமொன் றிலவங்கம் ரெண்டு இசைந்தநா கப்பூ மூன்று
சீலமா மிளகு நாலு திப்பிலி ஐந்து சுக்காறு
ஏலமா யிடித்த கார உயர்சரி யனுபா னத்திற்
காலமே கழஞ்சு கொள்ளக் காசமும் பித்தமும் போமே. (28)

***சேரும் சரக்குகள் :*** ஏலரிசி 1 பங்கு, கிராம்பு 2 பங்கு, சிறுநாகப்பூ 3 பங்கு, மிளகு 4 பங்கு, திப்பிலி 5 பங்கு, சுக்கு 6பங்கு.

***செய்முறை :*** மேற்படி சரக்குகளை முறைப்படி சுத்தம் செய்து இடித்துச் சலித்து வைத்துச்கொள்ள வேண்டும்.

***அளவு :*** ஒரு கழஞ்சு.

***தீரும் நோய்கள் :*** இருமல், பித்தம்.

**அதிசாரத்திற்குச் சூரணம்**

அதிவிடையஞ் சீரகஞ்சுக் காலில் சமோதகம் பிணியில வம்பிசின் பாலையும் காசுக்கட்டி
மதிலவண பிலவங்கஞ் சாதிக் காயும் வளமான பெருமரத்தோல் குடசப் பாலை
சதைலடித் தேசமனாய்ச் சூரணஞ்செய் தப்பாத தேன்தனி லிஞ்சிசாற் றில்கொள்ள
விதியிதென வந்த அதிசாரக் கிராணி விழுஞ்சியு மேகு மெனவிசாம்பி னாரே. (29)

***சேரும் சரக்குகள் :*** அதிவிடயம், சீரகம், சுக்கு, ஆயில்பட்டை, அசமதாகம், இலவம்பிசின், வெட்பாலை, காசுக்கட்டி, கறியுப்பு, கிராம்பு, சாதிக்காய், பெரு மரப்பட்டை, குடசப்பாலை இவற்றை சமஅளவு எடுத்துக்கொள்ளவேண்டும்.

***செய்முறை :*** மேற்படி சரக்குகளை முறைப்படி சுத்தி செய்து உலர்த்தி இடித்துச் சூரணம் செய்து கொள்ளவேண்டும்.

***அனுபானம் :*** தேன், இஞ்சிச் சாறு.

***தீரும் நோய்கள் :*** அதிசாரம், கிராணி, மலத்தில் சீதம் விழுதல்.

### அதிசாரத்திற்குச் சூரணம் - 2 (வேறு)

சுட்ட கடுக்காய் சாம்பல் துய்ய இலவம் பிசினுடனே
வட்ட முலையாள் காசகண்டை மதியா விடைய பின்னதியாய்
இஷ்ட மாகச் சூரணஞ்செய் திசைந்த தேனில் கொள்வீரேல்
கஷ்ட மென்ற அதி சாரங்கள் கடுகத் தீருங் கண்டீரே. (30)

***சேரும் சரக்குகள் :*** கடுக்காய் சுட்டசாம்பல், இலவம்பிசின், சுண்டைவற்றல், அதிவிடையம் இவற்றை சம அளவு எடுத்துக்கொள்ள வேண்டும்.

***செய்முறை :*** மேற்படி சரக்குகளை இடித்துச் சூரணம் செய்து வைத்துக்கொள்ள வேண்டும்.

***அனுபானம் :*** தேன்.

***தீரும்நோய் :*** அதிசாரம்.

### கிராணிக்குச் சூரணம்

விளாங்காய் வில்வப் பத்திரிக்காய் விறும் பருத்தி மாதளங்காய்
இளங்காய் வாழைப் பூவுடனே இகழா நல்லா புளியாரை

உளந்தான் சுருள இவை உலர்த்தி ஒன்றாயிடித்துவுடன் கொண்டால்
தூளங்காக் கிராணி கழிச்ச லெல்லாம் தூளாய்ப் போகும் கண்டீரே.(31)

***சேரும் சரக்குகள் :*** விளாங்காய், வில்வஇலை, வில்வக்காய், பருத்திவிதை, மாதுளங்காய், வாழைப்பிஞ்சு, வாழைப்பூ, புளியாரை இவற்றை சமஅளவு எடுத்துக் கொள்ளவும்.

***செய்முறை :*** மேற்கூறிய சரக்குகளை உலர்த்தி இடித்துச் சலித்து வைத்துக்கொள்ளவேண்டும்.

***தீரும் நோய்கள் :*** கிராணி, கழிச்சல்.

**சரும நோய்க்குச் சூரணம்**

வெள்ளறுகு கொடிவேலி மிளகரணைவேர்
வெள்வக் கணாப்பட்டை மேவு சிறு குறிஞ்சா
ஒள்ளிய தோர் கரு வேலம்பட்டை செங்கத் தாரிவேர்
உகந்திடு ஆகாசகரு டன் மிளகு சமனாய்
தெள்ளிய நெய் தேனுடனே அனுபானம் கொள்ள
சேர்ந்த கடிகுட்டம் விஷபாகங் கரப்பானும்
துள்ளியபுண் சூலையிவை மற்றுமுள்ள புண்ணுந்
துடிதுடித்துப் பறந்து விடுஞ் சொல்லிதுண்மை தானே. (32)

***சேரும் சரக்குகள் :*** வெள்ளறுகுவேர், கொடிவேலிவேர், மிளகரணைவேர், வக்காணப்பட்டை, சிறுகுறிஞ்சான், கருவேலம்பட்டை, செங்கத்தாரிவேர், ஆகாசகருடன், மிளகு முதலான சரக்குகளைசம அளவு எடுத்துக்கொள்ள வேண்டும்.

***செய்முறை :*** மேற்கூறிய சரக்குகளை முறைப்படி சுத்திசெய்து உலர்த்திப் பொடிசெய்து வைத்துக்கொள்ள வேண்டும்.

***அனுபானம் :*** தேன், நெய்.

***தீரும் நோய் :*** கடி, குட்டம், விடபாகம், கரப்பான், புண், சூலை.

### சூலைப்புண்ணுக்குச் சூரணம்

கந்தகமும் குக்கிலொடு பரங்கிப்பட்டை
　　கீர்த்தி பின்னு டனாலு மிரண்டு மொன்றாய்
தந்த சித்திர மூலமொடு விளங்க மூலஞ்
　　சாரமுடன் திரிகடுகு ஓமம் வகை ரெண்டு
மந்த விதஞ் சாதிக்காய் சாதி பத்திரி
　　மாலரத்தை சீரகமும் கடுக்காய் தான்றி
இந்த நெல்லி முள்ளி முதல் ஒன்றே காலா
　　இடித்தருந்தச் சூலை புண்க ளழிந்துபோமே. (33)

***சேரும் சரக்குகள்:*** கந்தகம் 1 பங்கு, குங்கிலியம் 2 பங்கு, பரங்கிப்பட்டை 4 பங்கு, சித்திரமூலம், வாய்விளங்கம், சுக்கு, மிளகு, திப்பிலி, ஓமம் இவை வகைக்கு 2 பங்கு, சாதிக்காய், சாதிப்பத்திரி, பேரரத்தை, சீரகம், கடுக்காய், தான்றிக்காய், நெல்லிமுள்ளி இவை வகைக்கு 1 பங்கு.

***செய்முறை :*** மேற்படி சரக்குகளை சுத்தி செய்து உலர்த்திப் பொடித்துச் சூரணித்து வைத்துக்கொள்ளவும்.

***தீரும்நோய் :*** சூலை, புண்.

### மந்தாக்கினி வாயுவுக்குச் சூரணம்

கொடுங்காயந் திரிகடுகு கூரிந்துப்பு
　　கொளச்சார மஞ்சு மிகு ரோகணியோடு
கடுங்கார மூலமொடு விளங்க நாகம்
　　காராத்தைச் சீரகமும் கரியசீரம்
துடங்கோமஞ் செவ்வியம் திப்பிலி மூலம்
　　பின் சொல் ஏலம் நாய்க்கடு குப்பை கூட்டி
திடங்காணச் சூரணமே கொள்வீராகில்
　　திகைத்து மந்தாக் கினிவாயு தீரும்தானே. (34)

சேரும் சரக்குகள்: பெருங்காயம், சுக்கு, மிளகு, திப்பிலி, இந்துப்பு, எவச்சாரம், சத்திச்சாரம், நவச்சாரம்,

ஏகம்பச்சாரம், காசிச்சாரம், கடுகுரோகிணி, சித்திரமூலம், வாய்விளங்கம், சிறுநாகப்பூ, சிற்றரத்தை, சீரகம், கருஞ்சீரகம், ஓமம், செவ்வியம், திப்பிலி மூலம், ஏலரிசி, கடுக்காய், கறியுப்பு, சம அளவு எடுத்துக்கொள்ளவும்.

***செய்முறை :*** மேற்கூறிய சரக்குகளை சுத்திசெய்து இடித்துச்சலித்து வைத்துக்கொள்ளவும்.

***தீரும் நோய்:*** மந்தாக்கினி, வாயு.

**மூலத்திற்குச் சூரணம்**

குறுகப் பிரண்டை தனை நறுக்கி கூறவெள்ளாட்டுக் கோமியத்தில்
மறுகச் சுவற நாழியுப்பு வளமாய்க் கூட்டிப் பொடியாக்கி
சிறுகக் கடுக்காய் பத்தினுடன் சீரிய மிளகு பலமிரண்டு
தறுகக் கடுகு சூரணந்தேன் தனில்தின் மூலந் தான் போமே. (35)

***செய்முறை:*** பிரண்டையை கணுபோக்கிச் சிறியதாக நறுக்கி வெள்ளாட்டு நீரில் வேகவைத்து ஒருபடி சேர்த்து உலர்த்திப் பொடி செய்து அத்துடன் கடுக்காய் 10, மிளகு 2 பலம் பொடிசெய்து சேர்த்து வைத்துக்கொள்ளவேண்டும்.

***அனுபானம்:*** தேன்.

***தீரும்நோய்:*** மூலம்.

**உடல் பலத்திற்குச் சூரணம்**

முத்தக் காசு சுடுவேம்பு முதிர்ந்த சாரடை முனி மஞ்சள்
ஒக்கக் கொண்ட பொடிதன்னை யுன்னினீர் தன்னில் உண்பீராய்
மத்த யானை பலனொக்கும் வாழ்நாள் உண்டாம் நரைமாறும்
கத்தம் நாறும் உடம்பெல்லாம் கழுநீர் நாறுங் கண்டீரே. (36)

சேரும் சரக்குகள்: முத்தக்காசு, வேப்பமரப்பட்டை, சாரணைவேர், மஞ்சள் இவற்றை சம அளவு எடுத்துக்கொள்ள வேண்டும்.

***செய்முறை:*** மேற்படி சரக்குகளை நன்கு உலர்த்திப் பொடிசெய்து சலித்து வைத்துக்கொள்ளவேண்டும்.

***அனுபானம்:*** நீர்.

***தீரும்நோய்:*** யானையைப் போன்ற பலமுண்டாகும். நரை மாறும்,கற்றாழை நாற்றத்துடன் உள்ள உடல் செங்கழுநீர் மணத்துடன் இருக்கும்.

**சரீர புட்டிக்குச் சூரணம்**

சீரான அமுக்கிரா வுடனே நல்ல
திரிகடுகு திரிபலை சித்திர மூலபின்
தேராத சீரகமு மரத்தை நாகமுஞ்
சொல்லு மரமஞ்சள் ரோகணியுங் கூட்டி
நேராகச் சூரணஞ் செய் ததனைத் தேனில்
நித்தமுந் தானருந்திடவே பிணிகளெல்லாம்
வாராது வாயுவெல்லாம் கூப்பிட்டோடும்
வளர்சரீரம் புட்டியுண்டாய் வலுவுண்டமே. (37)

***சேரும் சரக்குகள்:*** அமுக்கரா, சுக்கு, மிளகு, திப்பிலி, கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய், கொடிவேலி, சீரகம், அரத்தை, சிறுநாகப்பூ, மரமஞ்சள், கடுகுரோகிணி இவற்றை சமஅளவு எடுத்துக்கொள்ளவும்.

***செய்முறை:*** மேற்கண்ட சரக்குகளை சுத்திசெய்து உலர்த்திப் பொடிசெய்து சலித்து வைத்துக்கொள்ளவும்.

***அனுபானம்:*** தேன்.

***தீரும்நோய்கள்:*** உடல் புட்டி உண்டாகும், வாயு தீரும்.

**பித்தவாய்வுச் சூரணம்**

விளங்கமுடன் திரிகடுகு மூல மூலம்
வீறோமங் குரோசானி காயம் ரோகணி

வளங்கொள் கருஞ்சீரகஞ் சீரகமுங் கூட்டி
மருவு நிம்பச் சாறு கையாந்தகரைச் சாறு
துளங்கிடவே விட்டுலர்த்தி தூளாய் பண்ணி
சூரணத்தை தேனிலுண்ணத் துலங்கு வாயுவு
களங்க மிகு பித்த மண்டவாய்வு குன்மம்
கலங்கி விடுமொடு மென்று கருதினாரே. (38)

***சேரும் நோய்கள்:*** வாய்விடங்கம், சுக்கு, மிளகு, திப்பிலி, கொடிவேலி, ஓமம், குரோசானி, ஓமம், பெருங்காயம், கடுகுரோகிணி, கருஞ்சீரகம், சீரகம் இவற்றை சம அளவு எடுத்துக்கொள்ளவும். கையாந்தகரைச்சாறு இவற்றை விட்டு உலர்த்திப் பொடிசெய்து வைத்துக்கொள்ள வேண்டும்.

***அனுபானம்:*** தேன்.

***தீரும்நோய்கள்:*** வாயு, பித்தம், அண்டவாயு, குன்மம்.

## கணைக்குச் சூரணம்

சுக்குடன் நிலாவரைச் சூரணம் பண்ணித் தின்ன
மிக்கதோர் சூலை குன்மம் மேகங்களண்ட வாதம்
தக்கதோர் கபால சூலை சய முதல னேகரோகம்
மிக்க கணமுந் தீருமென்றே இறையவருரைத்தாரே. (39)

***சேரும் சரக்குகள்:*** சுக்கு, நிலாவாரை இரண்டையும் சம அளவு எடுத்தக்கொள்ளவேண்டும்.

***செய்முறை:*** மேற்கண்ட சரக்குகளை உலர்த்திப் பொடிசெய்து, சலித்து வைத்துக்கொள்ளவும்.

***தீரும்நோய்கள்:*** சூலை, குன்மம், மேகம், அண்டவாதம், கபாலசூலை, சயம், கணம்.

### இரத்த பித்தத்திற்குச் சூரணம்

நாவல் விரையாலம் விரையர சோடத்தி
நலமாகப் பொடி யாக்கி வளையங் கூட்டி
பூவகையாய் தூதுளம்பூ தூளாய் பண்ணி
புகழ் தேனும் நெய்யுடனே பொருந்தக் கொள்ளில்
மேவிய தோர் இரத்த பித்தம் இரத்த வாந்தி
மிக்க இரத்த காசமுதல் விரைந்து போமே. (40)

***சேரும் சரக்குகள்:*** நாவல்விதை, ஆலம்விதை, அரசுவிதை, அத்தி விதை, தாமரைவளையம், தூதுவளைப்பூ போன்ற சரக்குகளை சம அளவு எடுத்துக்கொள்ள வேண்டும்.

***செய்முறை:*** மேற்கூறிய சரக்குகளை சுத்திசெய்து நன்கு உலர்த்திப் பொடிசெய்து வைத்துக்கொள்ளவும்.

***அனுபானம்:*** தேன், நெய்.

***தீரும்நோய்கள்:*** இரத்தபித்தம், இரத்த வாந்தி, இரத்தகாசம்,

### அசுவகந்தாதிச் சூரணம்

வருகிராம் பொன்றுதா னாகமோ திரண்டும்பின் வளரேல மூன்று லவங்க
மரையாக இலவங்கப் பத்திரி அஞ்சுமாய் வந்தசீ ரகமாற தாய்
தரு கொத்த மல்லி தானேமுமறு கேட்டுமே தந்த திப்பிலி கணபதி சாரசுக்கு மதிலி ரட்டி
தளரகவ மதிலி ரட்டி சர்க்கரை சமன் கூட்டியே
பருவமா யகவாதி பலரோக மகலுமே பனைகவ வெகு யோகமே
பாரகவ மாறரை கிராம்பு வால் ஏலமோ பகர்கின்ற முக்கால தாய் நாகமரையதாய்
திப்பிலியு மொன்றரை பெருத்த மிளகொன்று சுக்குமொரு
மூன்று காலதாய் சர்க்கரையு மிதில்ரெட் டி புதியதேன் நெய் பகலுமே.

*41, 42 ஆகிய பாடல்கள் முழுமையும் இல்லை. ஆதலால் பொருள் எழுதப்படவில்லை.*

### வாதத்திற்குச் சூரணம்

மருந்து தான் சித்திரமூலம் வளருமா விலங்கை கொன்றை
திருந்திய முருங்கை சங்கு சேர்ந்தவெள் ளறுகு வேம்பு
பொருந்திய வெருகு சுக்கு புகழுந்திப் பிலிம ரீசங்
கருந்திய லவண மஞ்சும் காயங்கொள் வாதம் போமே. (43)

***சேரும் சரக்குகள்:*** சித்திரமூலம், மாவலிங்கப்பட்டை, கொன்றைப்பட்டை, முருங்கைப்பட்டை, சங்கம்பட்டை, வெள்ளறுகு, வேப்பம்பட்டை, மெருகன் கிழங்கு, சுக்கு, திப்பிலி, மிளகு, கறியுப்பு, வளையலுப்பு, கல்லுப்பு, இந்துப்பு, வெடியுப்பு, பெருங்காயம் இவற்றை சமஅளவு எடுத்துக்கொள்ள வேண்டும்.

***செய்முறை:*** மேற்படி சரக்குகளைச் சுத்தி செய்து இடித்துச் சலித்து எடுத்துக்கொள்ளவேண்டும்.

***தீரும்நோய்:*** வாத நோய்கள்.

***பாடவேறுபாடு:*** *அகத்தியர் 2000, பக்கம் 386, பாடல் எண். 2, கால் மண்டலந்தான் கொள்ளே.*

### பித்தத்திற்குச் சூரணம் - 3 (வேறு)

சாற்றிய மதுரங் கோட்டந் தருந்திரி கடுகு மூலம்
போற்றிய நெல்லி மாஞ்சி பூசுஞ்சந் தனங்கி ராம்பு
மாற்றிய தாளி சந்தான் மருவுசீ ரகமும் ஏலம்
மாற்றிய லாகச் சேர்த்து பரிந்து கொள் பித்தம் போமே. (44)

***சேரும் சரக்குகள்:*** அதிமதுரம், கோட்டம், சுக்கு, மிளகு, திப்பிலி, நெல்லிமுள்ளி, சடாமாஞ்சில், பூரம், சந்தனம், கிராம்பு, தாளிசபத்திரி, சீரகம், ஏலரிசி இவற்றை சமஅளவு எடுத்துக்கொள்ளவேண்டும்.

***தீரும்நோய்கள்:*** பித்த நோய்கள்.

### மூலத்திற்குச் சூரணம் - 2 (வேறு)

கன்னியில் சருகு முத்தங் கருணையும் வெருகு சுக்கும்
வன்னியாஞ் சித்திர மூலம் மருள்கிழங் கொடு கடுக்காய்
பன்னிய பிரண்டைகொன்றை பகர்புளி நரளைக் காட்டில்
துள்ளிய கருணைப் பாலில் சூரண மூலம் போமே. (45)

***சேரும் சரக்குகள்:*** கற்றாழை , வெற்றிலை, முத்தக்காசு, வெருகு, கருணைக்கிழங்கு, சுக்கு, கொடிவேலி, மருள் கிழங்கு, கடுக்காய், பிரண்டை, கொன்றை, புளிநரளை, காட்டுக்கருணை இவற்றை சமஅளவு எடுத்துக்கொள்ளவும்.

***செய்முறை:*** இவற்றை வெயிலில் நன்கு உலர்த்தி இடித்துச் சூரணித்துக்கொள்ளவும்.

***தீரும்நோய்:*** மூலம்.

***பாடவேறுபாடு:*** *அகத்தியர்-2000 பாகம்-2, பக்கம் 330, பாடல் எண். 22. அகத்தியர்-2000 பாகம்-3, பக்கம் 390, பாடல் எண். 11. சூரணம் செய்து கொள்ளே.*

### கிராணிக்குச் சூரணம் - 2 (வேறு)

இனியதோ ருடும்பு காய மிந்துப்பு வளைய லுப்புக்
கனிய வெள் ளுள்ளி சுக்குக் கடியதிப் பிலிம ரீசம்
தனியது சவுட்டு மண்ணு தளர் சித்திர மூல மோமம்
பனியது பிரண்டைச் சாற்றால் பண்ணினால் கிராணி போமே. (48)

***சேரும் சரக்குகள்:*** உடும்புச்சதை, பெருங்காயம், இந்துப்பு, வளையலுப்பு, பூண்டு, சுக்கு, திப்பிலி, மிளகு, சவுட்டுப்பு, கொடிவேலி, ஓமம் இவற்றை சம அளவு எடுத்துக்கொள்ளவும். பிரண்டைச்சாறு தேவையான அளவு எடுத்துக்கொள்ளவும்.

***செய்முறை:*** முதலில் கூறிய பதினோறு சரக்குகளைப் பிரண்டைச்சாறு விட்டரைத்து உலர்த்தி வைத்துக் கொள்ளவும்.

***தீரும்நோய்:*** கிராணி.

***பாடவேறுபாடு:*** இது போன்ற பாடல் அகத்தியர் 2000, பக்கம் 391, பாடல் எண். 13ல் காணப்படுகிறது.

**பிரமேகத்திற்குச் சூரணம்**

தளங்கிய[1] பரங்கிப்பட்டை தக்கந் தகஞ்சாதிக்காய்
களம்பறு கிராம்பு நாகம் கற்பூரஞ் சாதிப் பத்திரி
விளம்புறு அகவ கந்திமென்கொடி வேலி[2] மாஞ்சி
இளம்பு சர்க்கறை நெய் கூட்டி இதுபிர மேகம் போமே[3]. (47)

***சேரும் சரக்குகள்:*** *பரங்கிப்பட்டை, கந்தகம், சாதிக்காய், கிராம்பு, சிறுநாகப்பூ, கற்பூரம், சாதிப்பத்திரி, அமுக்கரா, கொடிவேலி, சடாமாஞ்சில் மேற்படிச் சரக்குகளை சம அளவு எடுத்துக்கொள்ளவேண்டும்.*

***செய்முறை:*** மேற்கூறிய சரக்குகளை முறைப்படி சுத்திசெய்து உலர்த்தி இடித்துவைத்துக்கொள்ளவேண்டும்.

***அனுபானம்:*** சர்க்கரை, நெய்.

***தீரும்நோய்:*** பிரமேகம்.

***பாடவேறுபாடு:*** *அகத்தியர் 2000, பக்கம் 394, பாடல் எண். 20. 1) விளம்பு, 2) தளர்கொடிவேலி, 3) இதமுடன் உட்கொள்வாயே.*

**கரப்பானுக்குச் சூரணம்**

கரந்திடும் பெருமருந்து கண்டங்கத் தரியஞ் சுக்கு
கரந்திடும் செங்கத் தாரி தோன்றுசீரகமி ரண்டு

பரந்திடும் கடுகு ரோகிணி பகர்சங்கு அரத்தை கூட்டி
நிரந்தர மிதனைக்[1] கொள்ள நீங்கிடு கரப்பான் தானே[2]. (48)

***சேரும் சரக்குகள்:*** *ஈசுவரமூலி, கண்டங்கத்திரி, சுக்கு, செங்கத்தாரி, சீரகம், கருஞ்சீரகம், கடுகுரோகிணி, சங்கங்குப்பி, அரத்தை இவற்றைச் சம அளவு எடுத்துக் கொள்ளவும்.*

***செய்முறை:*** *மேற்படி சரக்குகளை சுத்தம் செய்து உலர்த்தி இடித்துத் தூள்செய்து சலித்துக்கொள்ள வேண்டும்.*

***தீரும் நோய்:*** *கரப்பான்.*

***பாடவேறுபாடு:*** *அகத்தியர் 2000, பக்கம் 397, பாடல் எண். 26. 1) சூரணத்தை, 2) ரோகந்தானே.*

**வாயுவிற்குச் சூரணம் - 2 (வேறு)**

இசைந்தசீ ரகமி ரண்டு மியல்திரி கடுகு மூலம்
அசைந்தநற் சித்திர மூல மாந்திரி பலையு மிந்து
பிசைந்த வாய் விளங்கங்காயம் பெருத்திடு சவுட்டு மண்ணும்
கசந்தரோ கணியுந் தேனும் கலந்து கொள் வாயு போமே. (49)

***சேரும் சரக்குகள்:*** *சீரகம், கருஞ்சீரகம், சுக்கு, மிளகு, திப்பிலி, திப்பிலிமூலம், கொடிவேர்க்கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய், இந்துப்பு, வாய்விளங்கம், பெருங்காயம், சவுட்டுப்பு, கடுகுரோகிணி இவற்றை சமஅளவு எடுத்துக்கொள்ள வேண்டும்.*

***செய்முறை:*** *மேற்கண்ட சரக்குகளை சுத்தித்து உலர்த்தி இடித்துச் சலித்துச் சூரணித்துக்கொள்ளவும்.*

***அனுபானம்:*** *தேன்.*

***தீரும்நோய்:*** *வாயு.*

***பாடவேறுபாடு:*** *அகத்தியர் 2000, பக்கம் 400, பாடல் எண். 32. 1) ரோகம்.*

### சுவாசகாசத்திற்குச் சூரணம் -2 (வேறு)

பாரழிஞ்சிப் பட்டை பருத்த திரிகடுகு
சீரறிந்து வாலுளுவைச் சேர்ந்திட்டுக் கூர்பெறவே
தேனே கலந்து தினந் தின்ன சுவாசம் போம்
மானே யிதுமெய் மகிழ்ந்து. (50)

***சேரும் சரக்குகள்:*** அழிஞ்சில்பட்டை, சுக்கு, மிளகு, திப்பிலி, வாலுளுவையரிசி இவற்றை சமஅளவு எடுத்துக்கொள்ளவும்.

***செய்முறை:*** மேற்கண்ட சரக்குகளைச் சுத்தம் செய்து சூரணமாக இடித்துச் சலித்து வைத்துக்கொள்ள வேண்டும்.

***அனுபானம்:*** தேன்.

***தீரும்நோய்:*** சுவாசகாசம்.

***பாடவேறுபாடு:*** *அகத்தியர் 2000, பாகம் 2, பாடல் எண்.31, பக்கம் 365.*

# அகத்தியர் வாக்கியம்

*(மாத்திரை வர்க்கம்)*

சுவடி எண். 203, 223 காப்பீடு நூல் எண். 1270

### கோடாசூழி மாத்திரை

கந்தக மிருவி நாபி கேடிலா வாளந் தாரம்
வந்தவெ ங்காரஞ் சுக்கு மருவிய மிளகு தான்றி
தந்தரு ளிதமா நெல்லி தருகடு திப்பிலியோடு
இந்த மா முருக்கி வைச்சா றிதுகோடா சூழி யென்னே. (1)

***சேரும் சரக்குகள்:*** கந்தகம், இருவி, நாபி, நேர்வாளம், தாளகம், வெங்காரம், சுக்கு, மிளகு, தான்றிக்காய், நெல்லி, கடுக்காய், திப்பிலி, முருக்கிலைச்சாறு.

***செய்முறை:*** மேற்படி சரக்குகளை சம எடை எடுத்து வெங்காரத்தைப் பொரித்துக்கொண்டு, ஏனைய சரக்குகளை முறைப்படி சுத்திசெய்து, தூளாக்கிக் கல்வத்திலிட்டு முருக்கிலைச்சாறுவிட்டு அரைத்துச் சிறிய மாத்திரைகளாக உருட்டி நிழலில் உலர்த்தி எடுத்துக்கொள்ள வேண்டும்.

***தீரும்நோய்:*** சுரம்.

### ஆனந்த வயிரவன்

சூதம் நாபி மனோசிலை கந்தகத்
துய்யலிங்கம் வெங்காரம் சமனிடு
சாதியாம்எலு மிச்சம் பழரசச்
சாறு வார்த்தரைத் துண்டை பயறள
வாத சன்னி குளிர்சுர மாறலும்
வஞ்சி இஞ்சி வடியிட்ட சாற்றினில்
ஆதி ஆனந்த வயிரவன் என்றக்கால்
[1]அஞ்சியஞ்சி அலறிக் குதிக்குமே. (2)

---

குறிப்பு: இந்தவரி சுவடி எண். 223லிருந்து சேர்க்கப்பட்டுள்ளது.

***சேரும் சரக்குகள்:*** இரசம், நாபி, மனோசிலை, கந்தகம், இலிங்கம், வெங்காரம் ஆகிய சரக்குகள் சம அளவு.

***செய்முறை:*** மேற்படி சரக்குகளை முறையாகச் சுத்திசெய்து கல்வத்திலிட்டு எலுமிச்சம்பழச்சாறுவிட்டு, நன்றாக அரைத்துப் பயறளவு மாத்திரைகளாக உருட்டி உலர்த்திக்கொள்ள வேண்டும்.

***தீரும்நோய்கள்:*** வாதசன்னி, குளிர்சுரம், மாறல்சுரம்.

***அனுபானம்:*** இஞ்சிச்சாறு.

## இலிங்க மாத்திரை

*சாதிலிங்கம் வெங்கார மிரண்டுபங்கு*
*தக்காமணக் கம்வித்து நாலுபங்கு*
*ஓதியதோர் நேர்வாள மெட்டுப் பங்கு*
*உடன்சேர்த் தரைத்து 1 வுண்டை குன்றிபோலாம்*
*போதவே வயிறுவிட தண்ணீராகும்2*
*போம்வயிறு ஓட்டி விட வெந்நீராகும்3*
*ஓதியதோர் வாதம் எண் பத்து நாலும்*
*ஓட்டிவிடும் குன்மமுடன் கரப்பான் போமே. (3)*

***சேரும் சரக்குகள்:*** சுத்தித்த இலிங்கம் 1 பங்கு, பொரித்த வெங்காரம் 2 பங்கு, ஓடு நீக்கிய ஆமணக்கு விதை 4 பங்கு, சுத்தித்த நேர்வாளம் 8 பங்கு.

***செய்முறை:*** மேற்கண்ட சரக்குகளில் முதலிரண்டு சரக்குகளை முதலில் கல்வத்திலிட்டு நன்கு பொடித்துப் பின் பின்னிரண்டு சரக்குகளைச் சேர்த்தரைத்து நன்கு உறவானதும் குன்றிமணி அளவு மாத்திரை உருட்டி எடுத்துக்கொள்ள வேண்டும்.

***தீரும் நோய்கள்:*** 84 வகை வாதநோய்கள், குன்மம், கரப்பான்.

**அனுபானம்:** குளிர்ந்த நீர். இம்மாத்திரை தின்றால் பேதி அதிகமானால் வெந்நீர் அருந்த பேதி கட்டிவிடும்.

**பாடவேறுபாடு:** அகத்தியர் 2000, சரசுவதி மகால் நூலகம், கோடாக் குளிகை எனப்பெயரிடப்பட்டுள்ளது. பக்கம் 342, பாடல் 1. 1) உடன் கலந்திட்டரைத்து, 2) போதிற் குளிர் தண்ணீர்தாம் வயிறுப்போக்கும், 3) போத வெந்நீர் தனையருந்த வயிறுகட்டும்.

### சீதசுராங்கிசம்

சிறுகாஞ் சோறி நன்னாரி
தெய்வப் பெண்டீர் தன்னோடு
குறுகா தரைத்திட்டு குண்டை பண்ணிக்
கொடியசுரத்திற் கிடுவீராய்
மறுகால் வாராது வாதமொடு
வயிற்று நோவும் குன்மமுதல்
தறுகா தகலும தார் குழவீர்
தரணியோருக் குரையீரே. (4)

**சேரும் சரக்குகள்:** சிறுகாஞ்சோறி, நன்னாரி, அசமதா ஓமம் இவை மூன்றும் சம அளவு எடுத்துக்கொண்டு இடித்துச் சலித்துப் பின் கல்வத்திலிட்டு அரைத்து உருண்டை மாத்திரைகளாக உருட்டிக்கொள்ள வேண்டும்.

**தீரும் நோய்கள்:** வாதம், வயிற்றுவலி, குன்மம்.

### இராமபாண மாத்திரை

இதிரதம் நாபி கந்தகம்
இயல் சாதிக்காய் லவண மஞ்சும்
துதிசேர் சீனாக் காரமுடன்
சுவரப்பீசம் வெங்காரம்
அதிக சீரக மிரண்டுடனே
அப்பிரகந்தான் சமன் கூட்டி

குதிகொள் இஞ்சிச் சாறு தனில்
கூட்டி அரைத்து உருண்டை செய்யே. (5)

**சேரும் சரக்குகள்:** இரசம், நாபி, கந்தகம், சாதிக்காய், இந்துப்பூ, கல்லுப்பு, கறியுப்பு, வளையலுப்பு, வெடியுப்பு, படிகாரம், இலிங்கம், வெங்காரம், சீரகம், கருஞ்சீரகம், அப்பிரகம் இவற்றை சுத்திசெய்து சமன் சேர்த்துக்கொள்ள வேண்டும்.

**செய்முறை:** சுத்திசெய்த சரக்குகளைக் கல்வத்திலிட்டு இஞ்சிச் சாறுவிட்டு அரைத்து உருட்டிக்கொள்ளவேண்டும்.

**தீரும் நோய்:** சுரம்.

**சர்வ சுராங்கிசம்**

தாரங் கந்தகம் நாபிஇரசம்
தரு திரிகடுகொடு திரிபலையும்
கார இருவி சமன்கூட்டிக்
கடலாமணக்கு மதில்பாதி
சேர நிம்பச் சாற்றரைத்துச்
சேர்த்துச் சிறுக உண்டை பண்ணக்
கூற அனுபானத்திலிடக்
கொடிய கரங்கள் குடிபோமே. (6)

**சேரும் சரக்குகள்:** தாளகம், கந்தகம், நாபி, இரசம், சுக்கு, மிளகு, திப்பிலி, கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய், இருவி ஆகிய சரக்குகள் சம எடை, இதில் பாதியளவு ஆமணக்கு.

**செய்முறை:** சரக்குகளை முறைப்படி சுத்திசெய்து பொடித்துப்பின் கல்வத்திலிட்டு, எலுமிச்சம்பழச்சாற்றில் அரைத்துச் சிறு சிறு உருண்டைகளாக உருட்டி உலர்த்தி எடுத்துக்கொள்ள வேண்டும்.

**தீரும் நோய்:** சுரங்கள்.

**தோட சாந்த வைரவன்**

அக்கிரா காரம் நாபி
அரன்விந்து அபின் சாதிக்காய்
மிக்கதோர் லவங்கம் லிங்கம்
வியன் தார மத்தை வித்து
தக்கதாம் பூலச் சுண்ணச்
சாறுடன் அரைத்துக் கொள்ளக்
கக்குவான் கழிச்சல் காய்ச்சல்
காசம் மெய் சுவாசம் போமே. (7)

***சேரும் சரக்குகள்:*** அக்கிரகாரம், நாபி, இரசம், அபின், சாதிக்காய், கிராம்பு, இலவங்கம், இலிங்கம், தாளகம், ஊமத்தைவிதை சம அளவு.

***செய்முறை:*** சரக்குகளை முறைப்படி சுத்திசெய்து பொடித்துக் கல்வத்திலிட்டுச் சுண்ணாம்பு தெளிநீரால் அரைத்துச் சிறுசிறு மாத்திரைகளாக உருட்டிக்கொள்ள வேண்டும்.

***தீரும் நோய்கள்:*** கக்குவான், கழிச்சல், காய்ச்சல், காசம், சுவாசம்.

**வைரவன்**

இச்சை யுடன்திரி கடுகு லிங்கம்
எழுகா ரத்தோ டியல்நாபி
அச்ச மறத்தா னோர்கழஞ்சாய்
ஆகிய வாளந் தான் மூன்று
நொச்சி யிலைச் சாற்றரைத் துண்டை
நுகரப் பாலில் கொள்ளவதுமே
மெச்சிய வைரவ மிது வென்று
விரிசடை யோனும் விளம்பியதே. (8)

***சேரும் சரக்குகள்:*** சுக்கு, மிளகு, திப்பிலி, இலிங்கம், வெங்காரம், நாபி இவை வகைக்கு 1 கழஞ்சு, நேர்வாளம் 3 கழஞ்சு.

***செய்முறை:*** சரக்குகளை சுத்தித்துக் கல்வத்தில் போட்டு நொச்சிச்சாறு தேவையான அளவு விட்டு அரைத்துச் சிறிய மாத்திரைகளாக உருட்டி உலர்த்தி எடுத்துக்கொள்ள வேண்டும்.

***தீரும்நோய்கள்:*** சந்நி.

***அனுபானம்:*** பால்.

**ஆனந்த வைரவன் - (வேறு)**

துத்தம் துருசு எலிப்பா டாணம்
மெத்திய கந்தக மிகுரச மிவையும்
பத்திய பாகற் சாற்றிய ரைத்துத்
தித்திய மிளகள வுஉண்டை செய்யே. (9)

***சேரும் சரக்குகள்:*** பால்துத்தம், துருசு, எலிப் பாடாணம், கந்தகம், இரசம் சம அளவு.

***செய்முறை:*** முறைப்படி சுத்தி செய்து பாகலிலைச் சாற்றில் அரைத்து மிளகளவு மாத்திரை உருட்டிக் கொள்ளலாம்.

***தீரும்நோய்:*** சுரம்.

**சீத சுராங்கிசம்**

சீதக ராங்கிசம் செப்பக் கேளீர்
ஓதிய கந்தகம் உயர்ரச வாளம்
கோதரு திரிகடு கொடுகடு சிவதை
மாதுரு பாலினில் மாத்திரை செய்யே. (10)

***சேரும் சரக்குகள்:*** கந்தகம், இரசம், நேர்வாளம், சுக்கு, மிளகு, திப்பிலி, கடுக்காய், சிவதை சம அளவு.

***செய்முறை:*** முறைப்படி சுத்தித்த சரக்குகளைக் கல்வத்திலிட்டு, பால் வார்த்தரைத்து சிறிய அளவில் உருட்டி உலர்த்திக்கொள்ள வேண்டும்.

***தீரும்நோய்:*** குளிர் சுரம்.

**பைரவ மாத்திரை**

சூத கந்தக மரிதாரம்
துலங்கு நாபி நவச்சாரம்
சாதிலிங்கம் வெங்காரம்
தரித்த துத்தம் மனோசிலையும்
நீதித் திரிகடுகு நேர்வாளம்
நிறைந்தூ மத்தை விரையுடனே
போதச் சரியாய் மீன்பிச்சில்
புகழிஞ் சிச்சாற் றுண்டை செய்யே. *(11)*

***சேரும் சரக்குகள்:*** இரசம், கந்தகம், தாளகம், நாபி, நவச்சாரம், இலிங்கம், வெங்காரம், பால்துத்தம், மனோசிலை, சுக்கு, மிளகு, திப்பிலி, நேர்வாளம், ஊமத்தை, விதை சம அளவு.

***செய்முறை:*** சரக்குகளை அவற்றிற்குக் கூறப்பட்டுள்ள முறைப்படி சுத்திசெய்து மீன்பிச்சு, இஞ்சிச்சாறு விட்டு அரைத்து உருட்டிக்கொள்ள வேண்டும்.

***தீரும் நோய்:*** சந்நி, சுரம்.

**சன்னி, சுரத்திற்கு மாத்திரை (வேறு)**

இருவி யுடனே கந்தகமும்
இசைந்த நாபி இரதமுடன்
மருவு தாரத் தொடுசுரம்
வளந்திரி பலையும் சுக்குடனே

*கருது கையாந் தகரையிலை*
*கதித்த சாற்றில் உண்டைபண்ணி*
*மருவி உண்ணச் சுரம்தீரும்*
*மற்றும் சன்னி வாங்கிடுமே.* (12)

***சேரும் சரக்குகள்:*** இருவி, கந்தகம், நாபி, இரசம், தாளகம், வெங்காரம், கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய், சுக்கு சம அளவு.

***செய்முறை:*** சுத்தி செய்த சரக்குகளைக் கல்வத்தி லிட்டுக் கையான்தகரைச் சாறுவிட்டு அரைத்து மாத்திரை உருட்டிக் காயவைத்து எடுத்துக்கொள்ளவேண்டும்.

***தீரும்நோய்கள்:*** சுரம், சன்னி.

**சுரத்திற்கு மாத்திரை**

*அரிதாரம் லிங்கம் காரம்*
*அப்பிரகம் துத்தம் நாபி*
*பரிவான துருசி னோடு*
*பார்மனோ சிலைஇந் துப்பு1*
*பெரிதான பாரதம் பாம்பின்*
*பிச்சினில் இஞ்சிச் சாறு*
*உரித்தாக அரைத்து மாத்திரை*
*உட்கொள்ள2 சுரங்கள் போமே.* (13)

***சேரும் சரக்குகள்:*** தாளகம், இலிங்கம், வெங்காரம், அப்பிரகம், பால்துத்தம், நாபி, துருசு, மனோசிலை, இந்துப்பு, இரதம், சமஅளவு.

***செய்முறை:*** மேற்படி சரக்குகளை சுத்தி செய்து கல்வத்திலிட்டு தூளானபின் பாம்பு, பிச்சு, இஞ்சிச்சாறு விட்டு அரைத்து மாத்திரைகளாக உருட்டி உலர்த்தி எடுத்துக்கொள்ள வேண்டும்.

***தீரும்நோய்:*** சுரங்கள்.

***பாடவேறுபாடு:*** *அகத்தியர் 2000, பாகம் 3, பக்கம் 35, பாடல் எண். 12. 1) நீண்டித்து, 2) உடனே கேள்.*

**சீதசுராங்கிசம் - 3 (வேறு)**

கண்ணமரி தாரம் கவரக் கலந்தரைத்து
வண்ணமுட னேசெய்த மாத்திரையை - எண்ணியே
காதலுடன் உட்கொள்ளக் கார்குழலே அக்கணமே
சீதசுரமாறு மெனச் செப்பு. (14)

***சேரும் சரக்குகள்:*** தாளகத்தைச் சுண்ணாம்பு நீரால் அரைத்து மாத்திரை செய்து உலர்த்தி எடுத்துக்கொள்ள வேண்டும்.

***தீரும்நோய்:*** சீதசுரம்.

**பேதி மாத்திரை**

ஏந்துசெண் பகத்தோ டேலம்
இலவங்க மதுரம் கோட்டம்
சூழ்ந்திவை யெல்லாம் பாதி
சுத்திநேர் வாளம் பாதி
காய்ந்தநீர் விட்ட ரைத்துக்
கால்கழஞ்சு உண்டை கொள்ள
சேர்ந்திவை சுழிய வேண்டில்
தேன்சுக்கு நீரிற் கொள்ளே. (15)

***சேரும் சரக்குகள்:*** செண்பகமொட்டு, ஏலம், இலவங்கம், அதிமதுரம், கோட்டம், சம அளவு இதன் நேர் அளவு நேர்வாளம்.

***செய்முறை:*** சுத்தி செய்த சரக்குகளைப் பொடித்துக் கொண்டு அத்துடன் சுத்தித்த நேர்வாளம் கலந்து வெந்நீர்

விட்டு அரைத்து கழஞ்சளவு மாத்திரைகளாக உருட்டிக் கொள்ளவேண்டும்.

**தீரும்நோய்:** மலக்கட்டு.

**அனுபானம்:** தேன், சுக்குக் கஷாயம்.

### ஏலாதி உருண்டை

*ஏலாதி உண்டைக்கு நல்லேலம்*
*இலவங்கம் அதிமதுர மிருவேலி*
*வேரொடு சுக்கு நன்னாரி முந்திரிகை*
*பேரீஞ்சி லாமிச்சும் கோரோ சனை*

*தாளிச பத்திரி நிலப்பனை சடாமஞ்சில்*
*சந்தன தேவதாரம் தன்னுடன் திப்பிலி*
*இலுப்பையின் பூ இவை*
*தனித்தனி கழஞ்சாகவே*

*மேலான கடுகுரோகிணி கழஞ்சொரு பத்தையும்*
*வீறுமிள நீரை வார்த்து விழுதாய்*
*அரைத்துண்டை குன்றி அளவாக*
*வெயில் படாதவகை செய்*

*பாலான மொழி மங்கை*
*இளநீர் தனில் கொடு பற்றிய*
*சுரம் தீரவே பண்பான கூந்தல்*
*கசாயத்தில் இட்டிட பல சன்னியும்*
*தீருமே. (16)*

**சேரும் சரக்குகள்:** ஏலரிசி, இலவங்கம், அதிமதுரம், வெட்டிவேர், சுக்கு, நன்னாரி, திராட்சை, பேரீச்சு, விலாமிச்சவேர், கோரோசனை, தாளிசபத்திரி, நிலப்பனை, சடாமாஞ்சில், சந்தனம், தேவதாரம், திப்பிலி, இலுப்பைப்பூ இவை வகைக்கு 1 கழஞ்சு, கடுகுரோகிணி 10 கழஞ்சு.

***செய்முறை:*** சுத்தி செய்த சரக்குகளை இடித்துச்சலித்துச் சூரணமாக்கி அதன் கல்வத்திலிட்டு, இளநீர்விட்டு அரைத்துக் குன்றிமணி அளவு மாத்திரை உருட்டி, நிழலில் உலர்த்தி எடுத்துக்கொள்ள வேண்டும்.

***தீரும்நோய்:*** சுரம், சன்னி.

***அனுபானம்:*** இளநீர், முதியோர் கூந்தல் குடிநீர்.

**சுராங்கிசம் - 1**

துரிசு துத்தம் சாதிலிங்கம்
சொல்லு மெலிப் பாடாணம்
வரிசை மத்தைச் சாறதனை
வார்த்த ரைத்து உருண்டை
★பரிவுடனே குன்றிமணி மாத்திரமே கூட்டி
உலர்த்தி அந்த உண்டை
தின்ன தீரும் சுரமே. *(17)*

***சேரும் சரக்குகள்:*** துருசு, பால்துத்தம், இலிங்கம், எலிப்பாடாணம் சம அளவு.

***செய்முறை:*** மேற்படி சரக்குகளை சுத்தி செய்து கல்வத்திலிட்டுப் பொடித்து ஊமத்தை இலைச்சாறு விட்டரைத்து குன்றிமணி அளவு மாத்திரையாக உருட்டி நிழலில் உலர்த்தி எடுத்துக்கொள்ள வேண்டும்.

***தீரும் நோய்:*** சுரம்.

**சுரக்க பாடம்**

*சாதிலிங்கம் இந்துப்பு சாதிக்காய் திப்பிலியும்*
*ஓது கிராம்புப்பொன் னூமத்தை - மீதுவிரை*
*எல்லாம் சமன் கஞ்சா யிலைச்சாற் றரைத்து*
*நல்லாய் கொள்ளில்லை நசல்.* *(18)*

---

★ பின்னிரண்டு வரிகள் பிழையாக உள்ளன.

***சேரும் சரக்குகள்:*** இலிங்கம், இந்துப்பு, சாதிக்காய், திப்பிலி, கிராம்பு, பொன்னூமத்தை விதை.

***செய்முறை:*** மேற்படி சரக்குகளை சுத்திசெய்து பொடி செய்து கல்வத்திலிட்டுக் கஞ்சா இலைச்சாறு விட்டு அரைத்து மாத்திரை உருட்டி உலர்த்தி எடுத்துக்கொள்ளவேண்டும்.

***தீரும் நோய்:*** சுரம்.

### சுராங்கிசம் - 2

இதரமுட[1] நாபி இயல்காரம் கந்தகமுஞ்
சதிரத் திரிகடுகு[2] தானும் - துதி செய்
திரபலைகை யாந்தகரை சேர் சாற்றரத்து
வரிசையுடன் தின்னசுர மாறும்.[3] *(19)*

***சேரும் சரக்குகள்:*** இரசம், நாபி, வெங்காரம், கந்தகம், சுக்கு, மிளகு, திப்பிலி, கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய் சமஎடை.

***செய்முறை:*** மேற்படி சரக்குகளை சுத்தி செய்து பொடித்துக் கரிசாலைச் சாறுவிட்டரைத்து சிறிய மாத்திரைகளாக உருட்டி உலர்த்தி எடுத்துக்கொள்ள வேண்டும்.

***தீரும் நோய்:*** சுரம்.

***பாடவேறுபாடு:*** *அகத்தியர் 2000, சரஸ்வதி மகால் வெளியீடு பக்கம் 353, பாடல் எண். 17. 1) இரதமுடன், 2) சதிர் கடுவாளந், 3) சுரமேகும்.*

### வாதத்திற்கு மாத்திரை

சூதகந்த கம்நாபி சூழ்மிளகு நேர்வாளம்
போதப்பூ சணிவிதையிற் பூதியாய் - மாதேகேள்
உண்டை பண்ணித் தின்ன ஒடுங்குமே சன்னிசுரங்
கண்ட மட்டில் வாதமில்லை காண். *(20)*

***சேரும் சரக்குகள்:*** இரசம், கந்தகம், நாபி, மிளகு, நேர்வாளம், பூசணி விதை சமஅளவு.

***செய்முறை:*** சுத்தம் செய்யப்பட்ட சரக்குகளை கல்வத்திலிட்டுப் பொடித்து, வார்த்து சிறிய மாத்திரைகளாக உருட்டி நிழலில் உலர்த்தி எடுத்துக்கொள்ள வேண்டும்.

***தீரும்நோய்:*** சன்னி, சுரம், வாதநோய்.

**கபாட மாத்திரை - 1**

நாவி யுடனே திரிகடுகு
நல்ல லிங்க மதிவிடையம்
மேவி இதனைச் சமன் கூட்டி
விளங்கு நிம்பச் சாற்றரைத்து
தாவு மிஞ்சிச் சாறுதனில்
தானே கொள்ள வல்லீராய்
1பூவி லுள்ள கிராணிஎல்லாம்
போம் போம் உண்மை புகலிதுவே. *(21)*

***சேரும் சரக்குகள்:*** நாபி, சுக்கு, மிளகு, திப்பிலி, சாதிலிங்கம், அதிவிடையம் சம அளவு.

***செய்முறை:*** சுத்தி செய்யப்பட்ட மேற்படி சரக்குகளை இடித்துச் சலித்துத் தூளாக்கிப் பின் கல்வத்திலிட்டு எலுமிச்சம்பழச்சாறு விட்டரைத்து, மாத்திரைகளாக உருட்டி உலர்த்தி எடுத்துக்கொள்ள வேண்டும்.

***அனுபானம்:*** இஞ்சிச்சாறு.

***தீரும்நோய்:*** கிராணி

---

1. புவியிலுள்ள என்பதே பொருத்தமாயிருக்கும்.

### சன்னி சுராங்கிசம்

மிளகிரதஞ் சாதிலிங்கம் பச்சை நாபி
வெங்காரம் சுக்கு வெள்ளைப்பா டாணம்
பளிதமுறு கவுரிநேர் வாளம் துத்தம்
பரவியதிப் பிலியிருவி கடுக்காய் தான்றி
அளவுமனோ சிலைமுள்ளிச் சீரகம் பொன்
அரிதாரம் சமன் நிம்பச் சாற்றில் சேர்த்து
ஒளிவுடனே மிளகளவு கொள்ளத் தானே
உண்டான சுரம்சன்னி ஓடிப் போமே. (22)

***சேரும் சரக்குகள்:*** இரசம், இலிங்கம், நாபி, வெங்காரம், சுக்கு, வெள்ளைப்பாடாணம், கவுரி, நேர்வாளம், பால்துத்தம், திப்பிலி, இருவி, கடுக்காய், தான்றிக்காய், மனோசிலை, முள்ளி, அரிதாரம் சம அளவு.

***செய்முறை:*** முறைப்படி சரக்குகளைச் சுத்திசெய்து பொடித்துப்பின் கல்வத்தில் போட்டு எலுமிச்சைப் பழச்சாறு சேர்த்தரைத்து மிளகளவு உள்ள மாத்திரைகளாக உருட்டி உலர்த்தி எடுத்துக்கொள்ள வேண்டும்.

***தீரும்நோய்:*** சன்னி, சுரம்.

### சன்னிபாத வைரவன்

காரம்கந் தகம்தன் னோடு
கருதிய நாபி சூதம்
சேரவே செம்பு பற்பம்
திரிகடு சமனாய்க் கூட்டி
சாரவே இஞ்சிச் சாறு
தானரைத் துண்டை யாக்கிக்
கூறவே சன்னி பாத
வயிரவன் கூற லாமே. (23)

***சேரும் சரக்குகள்:*** வெங்காரம், கந்தகம், நாபி, இரசம், தாமிர பற்பம், சுக்கு, மிளகு, திப்பிலி இவற்றைச் சம அளவு எடுத்துக்கொள்ளவேண்டும்.

***செய்முறை:*** மேற்படி சரக்குகளை முறைப்படி சுத்தி செய்து பொடித்துப் பின் முறையே இரசம், கந்தகம், வெங்காரம், தாமிரபற்பம், நாபி, சுக்கு, மிளகு, திப்பிலி ஆகியவற்றை கல்வத்திலிட்டு இஞ்சிச்சாறு விட்டு அரைத்து உருண்டை செய்து நிழலில் உலர்த்தி எடுத்துக்கொள்ளவும்.

***தீரும்நோய்:*** சன்னி.

***பாடவேறுபாடு:*** அகத்தியர் 2000, பக்கம் 336, பாடல் 27.
1) முதலாய்.

**சுராங்கிசம்**

கூறுதா ளகமும் சூதங்
கொடியகந் தகமும் லிங்கம்
வீறுவெங் காரம் நாபி
மிகு மனோ சிலையும் கூட்டித்
தேறுமா லிஞ்சிச் சாறு
சித்திர மூலம் சாறு
நாறுதிப்பச்சா றுண்டை
நற்கராங் கிசங்க ளாமே. (24)

***சேரும் சரக்குகள்:*** அரிதாரம், இரசம், கந்தகம், இலிங்கம், வெங்காரம், நாபி, மனோசிலை இவற்றை சம அளவு எடுத்துக்கொள்ளவும்.

***செய்முறை:*** மேற்கண்ட சரக்குகளை சுத்திசெய்து கல்வத்திலிட்டு இஞ்சிச்சாறு, கொடிவேலிச்சாறு, எலுமிச்சம்பழச்சாறு விட்டு அரைத்து உருண்டை செய்து உலர்த்தி எடுத்துக்கொள்ளவும்.

***தீரும் நோய்:*** சுரம்.

## சூலை குன்ம மாத்திரை

திப்பிலி சாதிக் காயம்
சீர்பச்சை நாபி சூதம்
ஒப்பமாய் கந்த கத்தோடு
ஒரு மித்துச் சமனாய்க் கூட்டி
தப்பிலா இஞ்சிச் சாற்றால்
தானரைத் துண்டை யாக்கில்
வெப்புமாம் சூலை குன்மம்
விரைந்து போம் விளம்பினோமே. (25)

***சேரும்சரக்குகள்:*** திப்பிலி, சாதிக்காய், நாபி, இரசம், கந்தகம் இவற்றை சம அளவு எடுத்துக்கொள்ள வேண்டும்.

***செய்முறை:*** சுத்திசெய்த இரசம், கந்தகம் இவற்றைக் கல்வத்திலிட்டு நன்கு அரைத்துக்கொண்டு அத்துடன் கடைச் சரக்குகளைச் சுத்தி செய்து சேர்த்து இஞ்சிச்சாறு விட்டு மெழுகு பதமாக அரைத்து உருட்டி உலர்த்தி எடுத்துக் கொள்ளவும்.

***தீரும்நோய்கள்:*** சுரம், சூலை, குன்மம்.

## சுராங்கிசம்

விளம்பிய சுராங்கி சந்தான்
மேவிய நாபி சூதம்
வளம்படு மிளகு தானும்
வளரும்கந் தகமீன் பிச்சு
களம்பெற அரைத்துக் கூட்டி
கலந்தசர்க் கரைநீ ராலே
தளம்பெற மோரும் சோறும்
தானது கொடுக்க லாமே. (26)

***சேரும் சரக்குகள்:*** நாபி, இரசம், மிளகு, கந்தகம், மீன்பிச்சு இவற்றை சம அளவு எடுத்துக்கொள்ளவும்.

***செய்முறை:*** மேற்கூறப்பட்ட சரக்குகளை சுத்திசெய்து பொடித்துக் கல்வத்தில் முதலில் இரசம், கந்தகத்தைப் போட்டு நன்கு அரைத்து பின் மற்ற சரக்குகளைச் சேர்த்து அரைத்து மெழுகு பதமானதும் மாத்திரைகளாக உருட்டி உலர்த்தி எடுத்துக்கொள்ளவும்.

***அனுபானம்:*** சர்க்கரை நீர்.

***பத்தியம்:*** மோரும் சோறும்.

***தீரும்நோய்:*** சுரம்.

**சன்னி சுராங்கிசம்**

*கூட்டிய லிங்கம் நாபி*
*கொடியதா ளகம் ஒன் றாக்கி*
*வாட்டிய நிம்பச் சாற்றில்*
*வளருண்டை தன்னைப் பண்ணி*
*காட்டிய அனுபா னத்தில்*
*கலந்துநீ கொண்ட போது*
*தீட்டிய சுரங்கள் சன்னி1*
*திரண்டலைத் தோடிப் போமே.2* (27)

***சேரும் சரக்குகள்:*** இலிங்கம், நாபி, அரிதாரம் இவற்றைச் சம அளவு எடுத்துக்கொள்ள வேண்டும்.

***செய்முறை:*** மேற்படி சரக்குகளை சுத்தித்துக் கல்வத்திலிட்டு எலுமிச்சம்பழச்சாறு தேவையான அளவு விட்டு அரைத்து மாத்திரைகள் உருட்டி நிழலில் உலர்த்தி எடுத்துக்கொள்ளவும்.

***தீரும்நோய்:*** தகுந்த அனுபானத்தில கொள்ள சுரம், சன்னி தீரும்.

***பாடவேறுபாடு:*** *அகத்தியர் 2000, பக்கம் 359, பாடல் எண். 25. சரஸ்வதி மகால் வெளியீடு. 1) தீட்டிய கரங்களெல்லாம், 2) திரண்டு தானோடு மென்றே.*

## கபாட மாத்திரை

கஞ்சா நாபி காந்தம்அபின்
கருஊ மத்தைச் சாற்றரைத்து
விஞ்சா துண்ண பேதி யெல்லாம்
விட்டுப் போமே விளம்பக்கேள்
நஞ்சா விளாவின் பிசினாபினும்
நன்றாய் கஞ்சா விலைச் சாற்றில்
துஞ்சா தரைத்துக் கொடுப்பீராய்
துய்யக் கிராணி யகன்றிடுமே. (28)

***சேரும் சரக்குகள்:*** கஞ்சா இலை, நாபி, காந்தம், அபின் இவற்றை சம அளவு எடுத்துக்கொள்ள வேண்டும்.

***செய்முறை:*** இவற்றைச் சுத்தி செய்து கல்வத்திலிட்டு கருவூமத்தை இலைச்சாறு விட்டு அரைத்து மாத்திரைகளாக உருட்டி உலர்த்தி வைத்துக்கொள்ளவேண்டும்.

***தீரும்நோய்:*** பேதி.

***(வேறு)*** விளாம்பிசின், அபின் சம அளவு எடுத்து கஞ்சா இலைச்சாறுவிட்டு அரைத்து மாத்திரைகள் செய்து கொள்ள வேண்டும்.

***தீரும்நோய்:*** கிராணி.

## கிராணிக் கபாடம்

சூதம்சா திக்காய் சாதி
பத்திரி துலங்கு லிங்கம்
சீதஞ்சேர் காந்தம் ஈயம்
சீரக ஓமத் தோடே
நீதங்கஞ் சாவின் சாற்றால்
நிலை பெற வரைத்துக் கூட்டிப்
போதவே கொள்வீ ராகில்
பொருத்திய கிராணி போமே. (29)

***சேரும்சரக்குகள்:*** கஞ்சா இலை, நாபி, காந்தம், அபின் இவற்றை சம அளவு எடுத்தக்கொள்ளவேண்டும்.

***செய்முறை:*** முறைப்படி சுத்தி செய்யப்பட்ட மேற்படி சரக்குகளை கல்வத்திலிட்டு கஞ்சா இலைச்சாறுவிட்டு அரைத்து மாத்திரையாக உருட்டிக்கொள்ளவும்.

***தீரும்நோய்:*** கிராணி.

**காளமேகம்**

கத்தகம் சாதி லிங்கம்
கேடிலாத் தாளகம் காந்தம்
வந்த அப் பிரகம் கூட்டி
வளரும்நல் லாரைச் சாற்றில்
தந்தமாம் புடத்தில் போட்டுத்
தானிது காள மேகம்
தொந்தமாம் கிரீச்சர மேகம்
துயரறப் போவ தன்றே. *(30)*

***சேரும் சரக்குகள்:*** கந்தகம், சாதிலிங்கம், அரிதாரம், காந்தம், அப்பிரகம் இவற்றை சம அளவு எடுத்துக் கொள்ளவும்.

***செய்முறை:*** மேற்கண்ட சரக்குகளைச் சுத்தி செய்து ஆரை இலைச்சாறு விட்டு அரைத்து வில்லைதட்டி காயவைத்து அகலில் வைத்துப் புடமிட்டு எடுத்துக் கல்வத்திலிட்டு அரைத்து எடுத்துக்கொள்ளவும்.

***தீரும்நோய்:*** நீர்ச்சுருக்கு, மேகம்.

***பாடவேறுபாடு:*** அகத்தியர் 2000, பக்கம் 361, பாடல் எண். 28. 1) தாளகந்தான்.

## கண்டாவிழ்தம்

குங்குமங் கோட்டங் கஸ்தூரி
கோரோசனையோ டதிமதுரம்
பொங்கு கிராம்பு முந்திரிகை
புகல் பேரீச்சம் நன்னாரி
வெங் கிலுப்பைப் பூவெட்டி
வேரிலா மிச்சை காமப்பூ
அங்கித சாத்திர பேதி
உத்திராட்சம் சீரகமிவை
யோரிடையாமே. *(31)*

ஆமே முத்துப் பவழம்பொன்
அதிக சன்ன லவங்கப்பட்டை
தாமே கலங்கொம் பொடு வெள்ளி
சரள தேவ தாரமுடன்
பூமே வியபுத் திரசீவி
புகழ்பன்னீர் சந்தனநீரால்
நாமே அரைத்து உண்டைதன்னை
நலமாகக் கண்டா விழ்தமென்னே. *(32)*

***சேரும் சரக்குகள்:*** குங்குமப்பூ, கோட்டம், கஸ்தூரி, கோரோசனை, அதிமதுரம், கிராம்பு, முந்திரிகை, பேரீச்சம்பழம், நன்னாரி, இலுப்பைப்பூ, வெட்டிவேர், விலாமிச்சைவேர், மதனகாமப்பூ, சாத்திரவேதி, உருத்திராட்சம், சீரகம், முத்து, பவழம், தங்கம், சன்னலவங்கப்பட்டை, மான்கொம்பு, வெள்ளி, சரளதேவதாரு, புத்திரசோகி விதை இவற்றை சமஅளவு எடுத்துக்கொள்ளவும்.

***செய்முறை:*** முத்து, பவழம், தங்கம், மான்கொம்பு, வெள்ளி ஆகியவற்றை சுத்தி செய்து முறைப்படி பற்பமாக்கி, வைத்துக்கொள்ளவும் மற்ற சரக்குகளை சுத்தி செய்து

இடித்துப்பொடி செய்ய வேண்டியவற்றைப் பொடித்துக் கொண்டு பின்னர் ஒவ்வொரு சரக்காக கல்வத்திலிட்டுப் பன்னீர்விட்டு அரைத்து சரக்குகளையும் சேர்த்து நன்கு மெழுகு பதமாகும் வரை அரைத்து உருண்டை செய்து வைத்துக்கொள்ளவும்.

***தீரும் நோய்:*** அனைத்து நோய்கள்.

**கண்டாவிழ்தம்**

மதுரம்இந்துப்புக் கோட்டம்
மான்கொம்போ டுஉருத்தி ராட்சம்
சதிர்பெறு பொன்னும் முத்தும்
சார்வில்வப் பழங்கி ராம்பு
முதிர் வெள்ளிக் காமப் பூவும்
முத்துதிப் பிலி அக்கி ராக்காரம்
சுதிர்பெறு பவள மீன்பல்
கண்ட தோ டங்கள் போலே. *(33)*

***சேரும் சரக்குகள்:*** அதிமதுரம், இந்துப்பு, கோட்டம், முத்து, மான்கொம்பு, உருத்திராட்சம், தங்கரேக்கு, வில்வப் பழம், கிராம்பு, வெள்ளிரேக்கு, மதனகாம்பூ, திப்பிலி, அக்கிரகாரம், பவழம், மீன்பல்.

***செய்முறை:*** மான்கொம்பு, தங்கரேக்கு, முத்து வெள்ளிரேக்கு, பவழம் முதலியவற்றை முறைப்படி பற்பம் செய்து கொள்ளவேண்டும். ஏனைய சரக்குகளில் இடித்து தூள்செய்ய வேண்டியவற்றைத் தூள்செய்து வைத்துக் கொள்ளவேண்டும். பின் அனைத்து சரக்குகளையும் கல்வத்திலிட்டு நெகிழ அரைத்து உருண்டை செய்து உலர்த்தி எடுத்துக்கொள்ள வேண்டும்.

***தீரும் நோய்கள்:*** தோடம்.

## குன்மகுடோரி

சூதமொடு இருவி நாபி
சுக்குதிப் பிலிவெங் காரம்
போதவே கந்த கத்தான்
புகழ்மனோ சிலை அக்கர காரம்
பேதமா மருந்தோர் பங்கு
பெருத்திடு மிளகோர் பங்கு
போதவே குளிகை தின்னப்
போந்திடும் குன்மத் தானே. *(34)*

***சேரும் சரக்குகள்:*** இரசம், இருவி, நாபி, சுக்கு, திப்பிலி, வெங்காரம், கந்தகம், மனோசிலை, அக்கரகாரம், பெருமருந்து, மிளகு இவற்றை வகைக்கு ஒருபங்கு எடுத்துக்கொள்ளவும்.

***செய்முறை:*** மேலே கூறப்பட்டுள்ள சரக்குகளைச் சுத்தி செய்து பொடித்துக் கல்வத்திலிட்டுத் தண்ணீர்விட்டு அரைத்து மெழுகு பதமானதும் மாத்திரைகளாக உருட்டிக்கொள்ளவும்.

***தீரும்நோய்:*** குன்மம்.

## குன்மகுடோரி - 1 (வேறு)

காந்தமொடு நாபி கலத்தரச கந்தகமும்
போந்திடுவெங்காரம் புகழ்சிலையும் சேந்த
அரப்பொடி கற்றாழைச் சாற்றரைத்துண்ண குன்மம்
பரபரப் பாய் கெட்டோடும் பார்.1 *(35)*

***சேரும் சரக்குகள்:*** காந்தம், நாபி, இரசம், கந்தகம், வெங்காரம், மனோசில்லை, அரப்பொடி இவற்றைச் சமஅளவு எடுத்துக்கொள்ளவும்.

***செய்முறை:*** மேற்படி சரக்குகளை சுத்தித்துக் கல்வத்திலிட்டு கற்றாழைச்சாறு விட்டு அரைத்து உருட்டி வைத்துக்கொள்ள வேண்டும்.

***தீரும்நோய்:*** குன்மம்.

***பின்குறிப்பு:*** மேற்படி மருந்தில் கூறப்பட்ட சரக்குகளை கற்றாழைச் சாறுவிட்டு அரைத்துக்கொள்ள வேண்டும் என்று பாடலில் கூறப்பட்டிருந்தாலும் அவற்றை கற்றாழைச் சாறுவிட்டு அரைத்து வில்லை தட்டி உலர்த்தி புடமிட்டு எடுத்துக்கொள்வதே முறையானதாகும்.

***பாடவேறுபாடு:*** *அகத்தியர் 2000, பக்கம் 362, பாடல் 30,*
*1)* போமென்றே மோடும் பகர்

### சயச்செந்தூரம்

செப்பிய காந்தமிழரதம் சேர்ஒரு
குப்பியில் அடைத்தெழு கூறு மண்சீலை
ஒப்புடன் மனலில் இட்டொரு பகலெரி
தப்புறு சன்னிபோம் சயச்சிந் தூரமே. *(36)*

***சேரும்சரக்குகள்:*** காந்தம், இரசம் இவற்றை சம அளவு எடுத்துக்கொள்ள வேண்டும்.

***செய்முறை:*** இரசம், காந்தம், இரண்டையும் சுத்திசெய்து குப்பி ஒன்றில் போட்டு மேலே மூடி சந்துவாய் ஏழுசீலைமண் சுற்றி உலர்த்தி தீயில் ஒரு பகல் முழுவதும் எரித்து ஆறியபின் எடுத்துக் கல்வத்திலிட்டு அரைத்து வைத்துக்கொள்ள வேண்டும்.

***தீரும் நோய்:*** சன்னி.

### குன்மம் தீர பற்பம்

இந்து கந்தகம் பெருங்காயம்
இரத மோரொன் றிருகழஞ்சு
அந்த தாம்பிரம் அறுகழஞ்சு
அரைத்து தூதுளைச் சாறுதன்னில்

செந்தீ தன்னில் புடமிட்டுத்
தேனில் பற்பங் கொள்வீராய்
வந்து தொடுத்த குன்மங்கள்
வாரா தெட்டிப் பாராதே. (37)

***சேரும் சரக்குகள்:*** இந்துப்பு, கந்தகம், பெருங்காயம், இரசம் இவற்றை வகைக்கு 10. 2 கிராம். செம்பு 30.6 கிராம் எடுத்துக்கொள்ளவேண்டும்.

***செய்முறை:*** சுத்திசெய்து முடிக்கப்பட்ட மேற்படி சரக்குகளைக் கல்வத்திலிட்டு தூதுவளைச் சாறுவிட்டு அரைத்து எரிப்புடமாகச் செய்து ஆறியபின் பற்பத்தை எடுத்து அரைத்து வைத்துக்கொள்ளவும்.

***அனுபானம்:*** தேன்.

***தீரும் நோய்:*** குன்மம்.

**சுயமாக்கினி**

நாலு சூதம், சிலை ரெண்டு[1]
நல்ல கந்தகம் நாலுரெண்டு
காலாங் காந்தம் பதினாறு[2]
கடிய லோகம் அதிவிரட்டி[3]
ஏலங் குழலார் அம்மி தனில்
இழைக்கும் குமரிச் சாறறரைத்து
தாலந் தன்னில் வைத்தவுடன்[4]
தழலாய் எரியும் கண்டீரே. (38)

கண்டீர குவை குன்மம் பீலிகையும்[1]
கடிய பித்தம் பாண்டு ரோகம்
உண்டா லறாத புளித் தேப்பம்
ஓட்டுங் குளிரும் சிறுசுரமும்
கொண்டால் இஞ்சிச் சாற்றுடனே[2]
குணமே ஆகும் குருவறிய
கண்டே சொன்னோம் இத்தனையும்[3]
கருதிக் கொள்ளும் கண்டீரே.[4] (39)

***சேரும் சரக்குகள்:*** இரசம் 4 பங்கு, மனோசிலை 2 பங்கு, கந்தகம் 8 பங்கு, காந்தம் 16 பங்கு, அயம் 32 பங்கு.

***செய்முறை:*** இந்தச் சரக்குகளை சுத்தித்து கற்றாழைச் சாறுவிட்டு அரைத்து வில்லைதட்டி ஒரு தட்டில் வைத்து வெயிலில் வைக்க எரிந்த செந்தூரம் ஆகும்.

***அனுபானம்:*** இஞ்சிச்சாறு.

***தீரும்நோய்:*** அகுவை, குன்மம், பீலிகை, பித்தம், பாண்டு, புளித்தேப்பம், குளிர், சுரம்.

***பாடவேறுபாடு:*** தேரையர் வாகடம், பக்கம் 128, ***பாடல்எண். 354.***

1) நாலு காசெடை அரப்பொடியும் நல்ல சார
மிருகழஞ்சு

2) சாலு மிரதங் கந்தகமும்

3) தனயே வொவ் வொன்றிரு கழஞ்சு

4) தப்பி வைத்தால்

***பாடல் எண். 355***

1) கண்டீர் குன்ம பொட்டு வகை

2) உண்ட வுடலில் புளித்தேப்பம்
உடலில் கலந்த பிணிதீரும்

3) பண்டே சுக்கு மிளகுடனே
பலத்த திப்பிலி யிந்துப்பு

4) சுருதித் தேனில் கொள்வீரே.

**அகத்தியர் 2000, பாகம்-3, பக்கம் 334, பாடல் எண். 30, 31**

நாலு சூதம் சிலையிரண்டு
நல்ல கெந்தக மதற்கு ரெட்டிக்
காலக கந்த மதுக்கு ரெட்டி
கடிய லோகத்துக்கு ரெட்டி
ஏலங் குழலார் குமரிச் சாற்
றாலே அரைத்து இளக்கமுடன்
தாலத் தின்பின் னேதப்பத்
தணலா யெரியுங் கண்டீரே
கண்டு கொள்ளீ ரிது தனக்கு
கனத்த வாயு குன்மமுடன்
கிண்டு செய்யும் பாண்டு வரும்
விஷப்பாகா... வீக்கமுடன்
அண்ட வாதம் விரை வாதம்
அற்றுஞ் சந்நி யதி சாரம்
விண்டே யேகும் பணவெடைதாள்
விரைய இஞ்சிச் சாற்றிலிடே.

**தன்வந்திரி வாகடம், பாடல் எண். 592, 593, 760, 761, 762**

நாலு சூதம் சிலையிரண்டு
நல்ல கெந்தகம் நாலிரண்டு
காலு காந்த மதற்கிரட்டி
கல்செய லோக மதற் கிரட்டி
நீல விழியா லம்மி தன்னில்
நீலிச் சாறு வார்த்தரைத்து
தாலத் துள்ளே வைப்பீராய்
தழலாய்ச் சொரியும் கண்டீரே. (592)

கண்டீர் குன்மம் பீலிகையுடன்
கதித்த பித்தம் பாண்டு ரோகம்
உண்டா லாறாப் புளித் தேற்கு
ஊது கரப்பான் வாயுவுடன்

பண்டே யுள்ள நோயனைத்தும்
　　பாம்பு கடியு மிவை மாறும்
கண்டே சொன்னேன் இத்தனையும்
　　கடிகிக் கொள்ள வல்லிரே. (593)

**பஞ்ச செந்தூரம்**

பஞ்சசெந் தூரம் பண்ண
　　பாரிய யிரதம் லிங்கம்
தஞ்சமாம் காந்தம் வெள்ளை
　　சவுரீயங் கவுரி அஞ்சும்
விஞ்சறு பதம்மென் காணி
　　மேவிய சாற்ற ரைத்து
மஞ்சுறு சட்டி தன்னில்
　　வைத்துசெந் தூரம் பண்ணே. (40)

***சேரும் சரக்குகள்:*** இரசம், இலிங்கம், காந்தம், வெள்ளீயம், கௌரி இவற்றை சம அளவு எடுத்துக்கொள்ள வேண்டும்.

***செய்முறை:*** மேற்படி சரக்குகளை முறைப்படி சுத்தி செய்து பொன்னாங்காணிச் சாறுவிட்டு அரைத்து வில்லை தட்டி உலர்த்தி, அகலிலிட்டு ஐம்பது எருவில் புடமிட்டெடுக்கச் செந்தூரமாகும்.

***குறிப்பு:*** தீரும் நோய், அனுபானம், மருந்தளவு போன்றவை கூறப்படவில்லை. இனிவரும் பாடல்கள், சுவடி எண். 223இல் உள்ளவை.

**வங்கச்செந்தூரம்**

வங்கத்தைக் கள்ளிப் பாலில்
　　வரிசையாய் உருக்கிச் சாய்த்து
பொங்குத்தப் புளியங் கொட்டைத்
　　தோல் தனைப் பொடியாக்கி

*தங்கிக்கீழ் மேலு மிட்டு*
*சட்டியில் நாலு சாமம்*
*செங்கல்போல் எரிக்க நல்ல*
*செந்தூர மாகுந் தானே.* (41)

***செய்முறை:*** வங்கத்தை உருக்கி கள்ளிப்பாலில் சாய்க்கச் சுத்தியாகும். இதுபோன்று ஏழுமுறை செய்து எடுத்துக் கொள்ளவேண்டும். பின் புளியங்கொட்டைத் தோலைப் பொடிசெய்து சட்டியிலிட்டு வங்கத்திற்கு கீழும் மேலும் பரப்பி 4 சாமம் எரித்தெடுக்கச் செந்தூரமாகும்.

***குறிப்பு:*** மருந்தளவு, தீரும்நோய், அனுபானம் போன்றவை கூறப்படவில்லை.

## அரிதாரச் செந்தூரம்

*அரிதாரம் பலமோர் அஞ்சு*
*ஆவின் மோர் கோமி யம்பின்*
*உரிய சுண்ணாம்பு நீரால்*
*ஊற ஒவ் வொருநாள் நீக்கி*
*பெரியகாய் வேளைச் சாற்றால்*
*பலப்பட அரைத்துத் தட்டி*
*நெரியகாய் வேளைச் சாம்பல்*
*நேர்ந்தபா னையில் போடே.* (42)

*போட்டபின் அரிதா ரத்தை*
*பொருத்தவே சாம்பல் தன்னை*
*வாட்டமாய் நீக்கி மூடி*
*மறையவேழ் சீலை மண்செய்*
*தேட்டமாய் மூன்று நாளும்*
*செந்தழ லிடுசெந் தூரம்*
*நாட்டமாய் கொள்ளச் சூலை*
*நடுக்கல் குன்மமும் போமே.* (43)

***செய்முறை:*** தாளகம் 5 பலம் (175 கிராம்), எடுத்துக்கொண்டு, அதனை முறையே பசுவின் மோர், பசுநீர்,

சுண்ணாம்புத் தெளிநீர் ஆகியவற்றில் ஒவ்வொருநாள் ஊறவைத்துக் கழுவி எடுக்கச் சுத்தியாகும். இவ்வாறு சுத்தி செய்யப்பட்ட த் தாளகத்தை கொள்ளுக்காய் வேரைச் சாற்றில் அரைத்து வில்லைத்தட்டி, உலர்த்தி அதனை கொள்ளுக்காய் வேளைச் சாம்பல் உள்ள பானையில் வைத்து அதன் மேலும் மேற்படி சாம்பலைப் போட்டு பானை வாய்க்கு ஏழு சீலைமண் செய்து மூன்று நாள் நெருப்பிலிட்டு எரித்தெடுக்கச் செந்தூரமாகும்.

***தீரும்நோய்:*** சூலை, நடுக்கல், குன்மம்.

### உலோகச் செந்தூரம்

திரமிகு லோகம் தன்னை
செய்தரப் பொடிய தாக்கி
வரமிகு நாவல் சாற்றால்
வளம்பட அரைத்து வாங்கி
அரமிகு அரளி தன்னில்
ஆர்ந்த புடசெந்தூரம்
உரமிகு பாண்டு சூலை
உட்கொள்ள சுவாசம் போமே. *(44)*

***உலோகச்செந்தூரம்:*** அயப்பொடியை நாவல் பட்டைச் சாறுவிட்டு அரைத்து வில்லை தட்டி உலர்த்தி நூறு எருவில் புடமிட்டு ஆறவைத்து எடுக்கச் செந்தூரமாகும்.

***தீரும்நோய்கள்:*** பாண்டு, சூலை, சுவாசநோய்.

### குன்மகுடோரி மாத்திரை

வங்கமோ டிரதங் காந்தம்
வளருந்தா மிரமும் சேர்ந்து
அங்கமாம் துரிசு தாரம்
அக்கிர காரம் தாரம்
பொங்கிய சீனாக் காரம்
புகழும்சுந் தகந்தான் கூட்டி
சங்கைமாத் திரைதான் கொள்ள
சகலகுன் மங்கள் போமே. *(45)*

**சேரும் சரக்குகள்:** காரீயம், இரசம், காந்தம், செம்பு, துரிசு, பால்துத்தம், அக்கிரகாரம், தாளகம், சீனாக்காரம், கந்தகம் இவற்றை சம அளவு எடுத்துக்கொள்ளவும்.

**செய்முறை:** மேற்படி சரக்குகளை முறைப்படி சுத்திசெய்து அக்கிரகாரம் தவிர ஏனையவற்றை புடமிட்டு எடுத்து பின் கல்வத்திலிட்டு அக்கிராகாரத்தையும் தூள்செய்து சேர்த்து நீர்விட்டரைத்து மாத்திரை செய்து கொள்ளவும்.

**தீரும் நோய்:** அனைத்து வகை குன்மம்.

### குன்ம சூலை மேகத்திற்கு

ஈயமும் ரசமுங் காந்தம்
இயலரி தாரம் லோகம்
நேயமாய் கந்த கந்தான்
நிறை நிம்பச் சாற்ற ரைத்து
வாயமாய் தேனில் நெய்யில்
வளரிஞ்சிச் சாற்றி லுண்ண
போய்விடும் குன்மம் சூலை
பொருந்திய மேகம் போமே. (46)

**சேரும் சரக்குகள்:** காரீயம், பாதரசம், காந்தம், தாளகம், அயம், கந்தகம் இவற்றை சம அளவு எடுத்துக்கொள்ள வேண்டும்.

**செய்முறை:** மேற்கண்ட சரக்குகளை சுத்தித்து எலுமிச்சம்பழச்சாறு விட்டரைத்து குன்றிமணி அளவு மாத்திரை உருட்டி உலர்த்தி எடுத்துக்கொள்ளவேண்டும்.

**அனுபானம்:** தேன், நெய், இஞ்சிச்சாறு.

**தீரும் நோய்கள்:** குன்மம், சூலை, மேகம்.

### வெள்ளைப் பாடாண மாத்திரை

வெள்ளைப்பா டாணம் தன்னை
விரைந்திடு பாகல் சாற்றில்
துள்ளவே சுத்தி பண்ணி
சூழ்திரி கடுகு கூட்டி

கொள்ளப் பால் தயிர் மோர் தன்னில்
குலைந்திடும் சுரங்களெல்லாம்
தள்ளிப்போம் சன்னி குன்மம்
தளர்ந்துவிட் டோடும் என்றே. (47)

***சேரும் சரக்குகள்:*** வெள்ளைப்பாடாணம், சுக்கு, மிளகு, திப்பிலி இவற்றைச் சமஅளவு எடுத்துக்கொள்ள வேண்டும்.

***செய்முறை:*** வெள்ளைப்பாடாணத்தை யாகல் இலைச்சாற்றில் போட்டு வெய்யிலில் வைத்து எடுத்தால் சுத்தியாகும். இவ்விதம் சுத்தி செய்யப்பட்ட வெள்ளைப் பாடாணத்துடன் சரியளவு சுக்கு, மிளகு, திப்பிலிப் பொடிகள் கூட்டி அரைத்து வைத்துக்கொள்ளவேண்டும்.

***அனுபானம்:*** பால், தயிர், மோர்.

***தீரும்நோய்கள்:*** சுரம், சன்னி, குன்மம்.

**சூலை கிரந்திக்கு**

மால்கந் திரதமே மாசின்றித் தான் சேர்த்துச்
சேல்விழியாய் தேனில் தினம் கொள்ள - சாலவே
சூலை கிரந்தி துயர்மேகம் குன்மமொடு
வேலை அகன்றிடுமே மெய். (48)

***சேரும் சரக்குகள்:*** தாளகம், கந்தகம், இரசம் இவற்றை சம அளவு எடுத்துக்கொள்ளவேண்டும்.

***செய்முறை:*** மேற்படி சரக்குகளை சுத்திசெய்து கல்வத்திலிட்டு பொடித்து வைத்துக்கொள்ளவேண்டும்.

***அனுபானம்:*** தேன்.

***தீரும்நோய்:*** மேகம், குன்மம்.

**காசம், புண்ணுக்கு மருந்து**

மெய்சாதி லிங்கம் மிகுந்த அரிதாரம்
செய் லோகம் கூட்டிச் செயமாக்கி - வைநீதான்

காசம்புண் சூலை சயரோகம் தான்திரண்டு
தேசம்விட்டுப் போமிதுதான் செப்பு. (49)

***சேரும் சரக்குகள்:*** இலிங்கம், தாளகம், அயம் இவற்றை சமஅளவு எடுத்துக்கொள்ளவும்.

***செய்முறை:*** சுத்திசெய்த மேற்கண்ட சரக்குகளைக் கல்வத்திலிட்டுப் பொடிசெய்து எடுத்துக்கொள்ள வேண்டும்.

***தீரும் நோய்கள்:*** இருமல், புண், சூலை, சயம்.

***குறிப்பு:*** அளவு, அனுபானம் கூறப்படவில்லை.

**சலோதாரி மாத்திரை**

செப்புகின்ற வெங்காரம் சீர்சிலா சத்தும்தான்
உப்புடனே தாளகமும் ஓர்ந்து கொண்டு - ஒப்பறவே
மாத்திரையாய் பண்ணி மகிழ் தேனில் உண்டிடவே
மூத்திரகி ரிச்சரம்போம் முன். (50)

***சேரும் சரக்குகள்:*** வெங்காரம், சிலாசத்து, அரிதாரம் இவற்றை சமஅளவு எடுத்துக்கொள்ளவேண்டும்.

***செய்முறை:*** இச்சரக்குகளைச் சுத்தி செய்து நீர்விட்டு அரைத்து மாத்திரை உருட்டிக்கொள்ளவேண்டும்.

***அனுபானம்:*** தேன்.

***தீரும்நோய்:*** மூத்திரக்கிரிச்சரம்.

**✱சிரங்கு தீரத் தைலம்**

கார்போகி நீரொட்டி கருஞ்சீரகம்சூதம்
கற் குகந் தகத்துடனே
நீரோடு தென்னம் பழச்சாறுவிட்டு
நீ நெகிழ அரைத்த பின்னே
தாரோடு எள்ளெண்ணெய் எரித்துக் குளிர்ந்ததைத்
தான் மெய்யில்பூசி விடுபின்
நீராட நாளோட எண்ணவே சிரங்கெல்லாம்
நிலைகெட்டு ஓடி விடுமே. (51)

குறிப்பு: ✱ இப்பகுதிக்குத் தொடர்பில்லாத தைலமுறை ஒன்று 51 ஆவது பாடலாக உள்ளது.

***சேரும் சரக்குகள்:*** கார்போக அரிசி, நீரடிமுத்து, கருஞ்சீரகம், இரசம், கந்தகம் சம அளவு.

***செய்முறை:*** இரசம், கந்தகம் இரண்டையும் சுத்திசெய்து கல்வத்திலிட்டு அரைத்துக்கொள்ளவேண்டும். அத்துடன் மற்ற சரக்குகளைப் பொடிசெய்து சேர்த்து தேங்காய்ப்பால் விட்டு நன்கு அரைத்து அதனை நல்லெண்ணெயுடன் கலந்து காய்ச்சி ஆறவைத்து எடுத்துக்கொள்ளவேண்டும்.

***தீரும்நோய்:*** சிரங்குகளுக்கு மேற்பூச்சாகப் பயன்படுத்த வேண்டும்.

## சுத்தி முறைகள்

**1. அயப்பொடி உலோகம்:** அயப்பொடியை நாவல்பழச் சாற்றில் மூழ்கும்படி விட்டு, சாறு சுண்டும் வரை வெயிலில் வைத்துக் கழுவி எடுக்கவும். இவ்விதம் ஆறுமுறை செய்ய அயம் சுத்தியாகும்.

**2. அரிதாரம்:** ஒருபலம் தாளகக்கட்டியை எடுத்துச் சுண்ணாம்புக் கல்லின் இடையில் வைத்துப் பனங்கள்ளினால் 10 முறைக்கு குறையாமல் தாளித்து எடுத்துக் கழுவி உலர்த்திக்கொள்ளச் சுத்தியாகும்.

**3. இந்துப்பு:** இந்துப்பைக் காடியில் மூன்றுநாள் ஊறப்போட்டு சூரிய ஒளியில் உலர்த்தி எடுக்கச் சுத்தியாகும்.

**4. இரசம்:** ஒருபலம் இரசத்தை செங்கல் மாத்தூளிலும், மஞ்சப்பொடியிலும் ஒவ்வொரு மணிநேரம் ஆட்டி, சுத்தநீரில் அலம்பி 13 லிட்டர் மேனிச்சாற்றில் இட்டு அடுப்பேற்றிச் சாறு சுண்டும்படி எரித்து எடுக்கில் சுத்தியாகும்.

**5. இலிங்கம்:** தாய்ப்பாலிலும், எலுமிச்சம்பழ இரசத்திலும் முறையே ஒவ்வொரு நாள் ஊற வைத்து எடுக்கச் சுத்தியாகும்.

**6. ஈயம், வங்கம்:** நொச்சிச்சாற்றில் மஞ்சள்பொடியைக் கலந்து வைத்துக்கொண்டு அதில் வங்கத்தை உருக்கிச் சாய்க்கவும். இப்படி இருமுறை செய்யச் சுத்தியாகும். ஈயத்தை நொச்சிச்சாற்றில் கலந்து வெயிலில் வைத்தாலும் சுத்தியாகும்.

**7. எலிப்பாடாணம்:** ஒருபலம் பாஷாணத்தைக் கல்வத்திலிட்டுப் பொடித்து பழச்சாறு 3 பலம் விட்டு அரைத்து சிறு வில்லைகள் செய்து உலர்த்திக்கொள்ளவும். இவ்விதம் ஏழுமுறை செய்யவும்.

**8. கறியுப்பு:** கறியுப்பைக் கடல்நீர் அல்லது மழைநீர் விட்டுக் கரைத்து, வடிகட்டிக் காய்ச்சிக் குழம்பு பக்குவத்தில் இறக்கி, வெயிலில் காயவைத்து எடுக்க உறைந்து சுத்தியாகும்.

**9. கல்லுப்பு:** இதனைக் காடித் தண்ணீரில் பிசறி, பிறகு ஈரத்தைத் துணியில் துடைத்து வெயிலில் உலர்த்திக்கொள்ளச் சுத்தியாகும்.

**10. கௌரி:** கௌரிக்குப் பன்றி நெய்யில் ஒருசாமம் சுருக்குக் கொடுக்கச் சுத்தியாகும்.

**11. காந்தம்:** எலுமிச்சம்பழச்சாறு, புளித்தகாடி, புளித்தமோர் இவைகளில் முறையே மும்மூன்றுநாள் காந்தத்தை ஊறவைத்து வெயிலில் வைத்துக்கழுவி எடுக்கச் சுத்தியாகும்.

12. சிலாசத்தை பாலிட்டுக்காய்ச்சிக் கழுவி எடுக்கச் சுத்தியாகும்.

13. சீனாக்காரம், படிகாரம்: இதனை நீரில் கரைத்து வடிகட்டிக் காய்ச்சிக் குழம்புப் பக்குவத்தில் இறக்கிக் குளிரும்படி செய்யச் சுத்தியாகும்.

**14. தங்கம்:** தங்கத் தகட்டிற்குச் செம்மண் பூசி, அகலில் இட்டு அடுப்பேற்றி வாட்டிக் கழுவி, இங்ஙனம் மேலும் ஆறுமுறை செய்யப் பொன் சுத்தியாகும்.

**15. தாமிரம்:** செம்பை ஈசல் இறகு போலத் தட்டிச் சிவக்கக் காய்ச்சி கொள்ளுக்குடிநீர், புளியிலைச்சாறு, கற்றாழைச்சாறு, புளித்தமோர், பொன்னாங்காணிச்சாறு இவைகளில் தனித்தனியே ஏழுதரம் தோய்த்து எடுக்கச் சுத்தியாகும்.

**16. துரிசு:** துரிசினை வெண்மையாகும்படி பொரித்து எடுக்கச் சுத்தியாகும்.

**17. நவச்சாரம்:** நவச்சாரத்தை கோமூத்திரத்தில் கரைத்து, வடிகட்டிச் சுண்ட எரித்து வெயிலில் உலர்த்திஎடுக்கச் சுத்தியாகும்.

**18. பவழம்:** ஒருநாள் முழுவதும் பழச்சாற்றில் ஊறவைத்து மறுநாள் வெந்நீர் விட்டுக் கழுவி எடுக்கச் சுத்தியாகும்.

**19. மான்கொம்பு:** மான்கொம்பைச் சிறுதுண்டுகளாக்கி, இரண்டிரண்டாய்ப் பிளந்து அகத்தியிலைச் சாற்றில் ஒருநாள் முழுவதும் ஊறவைத்துச் சாற்றை நீக்கிக் கொம்புத் துண்டுகளைக் கழுவி உலர்த்திக்கொள்ளவும். இவ்விதம் ஏழுமுறை செய்யச் சுத்தியாகும்.

**20. வளையலுப்பு:** தேவையான அளவு எடுத்துப் புளித்தகாடி நீரில் 90 நிமிடம் ஊறவைத்து எடுத்து, சூரிய வெப்பத்தில் உலர்த்தி எடுக்க சுத்தியாகும்.

**21. வெங்காரம்:** இதனை நீர் வற்றும்படி பொரித்து எடுத்துக்கொள்ளச் சுத்தியாகும்.

**22. கந்தகம்:** கந்தகத்தை ஒரு இரும்புக்கரண்டியிலிட்டுச் சிறிது பசுவெண்ணெய் இட்டு உருக்கிப் பசும்பாலில் சாய்க்கவும். இவ்விதம் முப்பது முறை செய்ய கந்தகம் சுத்தியாகும். ஒவ்வொரு முறையும் புதிய பாலையே விடவும்.

**23. அப்பிரகம்:** அப்பிரகத்தை காடியில் ஊறவைத்து எடுக்கச் சுத்தியாகும்.